www.tamilarangam.net

# மனிதம்

தை – மாசி 1993 20

Manitham Jan-Feb




தமிழ்த் தேசிய ஆவண

www.tamilarangam.net

# உள்ளே :-


* சுவிசில்

தமிழ் இளைஞரை தாக்கிய துப்பாக்கிக்குண்டு

* இந்தியாவில்

இந்துமதவெறி அன்றும் – இன்றும்

— வரதன் —

* விடுதலைப்புலிகள்

தேசியசக்தியும் பாசிசசக்தியும் (கருத்தாடல்)

— மூ. சிவகுமாரன் —

* சிறுகதை

கொடியேற்றம்

— எம். ராமச்சந்திரன் — கண்டி

* இலங்கையிலிருந்து சில செய்திகள்

— அபூரணன் —

* கிளின்ரனிடம் எதிர்பார்க்கலாமா ?

— மணி —

* ஒரு சரித்திரத்தின் இறுதி அத்தியாயம் முடிகின்றது

— லோகன் —

www.tamilarangam.net

# மனிதம்



Januar
தை
+
Februar
மாசி

1993
Zwei monatlich
[illegible]
([illegible])

Impressum
&
Herausgeber:
Munitham
Postfach 13
3000 Bern 11
Schweiz

Redaktion:
V. Logadas, M. Narendran,
S. Raghavan
&
Munitham Redaktion Komitee

Abonnement:
22 Sfr (Pro Jahr)

Konto:- Munitham
3000 Bern 11
Pc: 30-37152-1
Bank Konto
Schweizerische
Kreditanstalt
3001 Bern
Munitham
220148-70

Druck
Hohlen Druck Ag
4912 Aarwangen

இனப் பிரச்சினைக்கான தீர்வு, ஆலோசனைகள் என்றெல்லாம் 'அலசும்' பாராளுமன்ற தெரிவுக்குழு வழமைபோல் இழுத்தடித்துக் கொண்டே போகிறது. இந்த வேளையிலே அமைச்சர் கமீத் இன் ஐரோப்பிய விஜயம், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கொழும்பு மேற்றிராணியின் யாழ் விஜயம் என்பவற்றின் பின்னணியிலே கிட்டுவின் யாழ் விஜயமும் இடம்பெற்றது எனக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய நாடொன்றின் மூளையிலே உருவாகிய 'இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கான' திட்டமொன்றுடன் கிட்டு இலங்கை திரும்பியபோதே கொல்லப்பட்டதாக புலிகள் கூறுகிறார்கள். இது உண்மையாக இருந்தால், கிட்டுவின் இந்தக் கொலைக்கு ஒரு அரசியல் பின்னணி இருக்கிறது என்பதை ஊகிப்பதில் கஸ்டமில்லை. தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு மேலாதிக்கம் மிக்க நாடாக இந்தியா தன்னை நிலைநிறுத்த துடித்துக் கொண்டிருக்கிறது. இலங்கை இனப்பிரச்சினையில் ஆரம்பம் முதலே தனது மூக்கை நுளைத்துக் கொண்டு செயற்பட்டது.

மனிதாபிமானம் என்ற போர்வையில் உணவுப் பொட்டலங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு வந்த இந்திய இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நோக்கத்தில் எதிர்பாராதவாறு தோல்வியுற்றது. இந்தியாவின் முகத்திரையை விலக்கிய இந்த நிகழ்வும், தமிழ் நாட்டுக்குள் வைத்தே ராஜீவ்காந்தியை கொலைசெய்த புலிகளின் அசாதாரண தலையீடும் இந்தியாவை உசுப்பிவிட்டிருந்தன. மற்றைய இயக்கங்களை கையாண்டு ஏமாந்துபோன இந்தியா, புலிகளை கையாள்வதில் புலிகளின் பலமும் ஏதேச்சாதிகார இயக்கத் தன்மையும் தமக்கு தடையாக இருப்பதை நன்கு உணர்ந்துள்ளது. எனவே மூர்க்கத்தனமாக குறுக்கு வழிகளில் –புலிகளின் பாணியிலேயே– செயற்படவும் இந்தியா பின்னிற்கப்போவதில்லை.

இதன் பின்னணியில் பார்க்கும்போது மற்றைய நாடுகளின் தலையீட்டுடன் இலங்கை இனப்பிரச்சினை கையாளப்படுவதை இந்தியா சகித்துக் கொள்ளாது. இந்த தலையீடு கிட்டுவின் உருவில் வரும்போது, இந்த கொலைவெறி அழிப்புடன் அதை நிறுத்திவிடும் குறுக்கு வழியில் இந்தியா இறங்கியிருக்கலாம் என்பது மறுப்பதற்கில்லை.

அதேநேரம் .... சமாதான முயற்சி குறித்து அறிய விரும்பி, அதுபற்றி கலந்தாலோசிக்க கிட்டுவை நாட்டுக்கு வருமாறு பணித்ததாகவும், அவரது வருகை குறித்து இந்திய அரசுக்கு தெரிவித்திருந்ததாகவும், இந்திய அரசு அவரது கப்பலை எந்தவித இடையூறுமின்றி பயணம் செய்ய அனுமதித்து அவருக்கு போதிய பாதுகாப்பு அளிப்பதாக உறுதியளித்திருந்ததாகவும் பாலசிங்கம் கூறியிருக்கிறார். இதைப் பார்க்கும்போது இந்தியத் தலையீட்டை உதாசீனம் செய்து புலிகள் செயற்படவில்லை என்பது தெரிகிறது.

www.tamilarangam.net

அப்படியாயின்,

? ஐரோப்பிய நாடு (அல்லது அதனுடன் சேர்ந்து இந்தியாவோ) சமாதானத் திட்டத்தை புலிகளிடம் மட்டும் இரகசியமான முறையில் அனுப்பிவைத்ததா ?

? இதை எப்படி சமதானத் திட்டமென்பது ?

? அப்படித்தான் இரகசியமென்றிருந்தால்கூட கிட்டு செல்வதற்கு தனியான கப்பலின் தேவைதான் என்ன ?

? இந்தியா பாதுகாப்பளிப்பதாக உறுதியளித்திருந்த நிலையில் கிட்டு ஏன் இப்படி 'வில்லங்கமான' முறையில் பயணம் செய்திருக்க வேண்டும் ?

என்ற கேள்விகள் எழுவதற்கு நியாயம் இருக்கத்தான் செய்கிறது..

இவற்றுக்கெல்லாம் விடைகாண முடியாத நிலையில், சர்வதேச கடற்பிராந்தியத்தில் கப்பலை மறித்து ... இந்திய கடற்பிராந்தியத்துள் கொண்டு சென்று அதை அழித்தொழித்தது ... சர்வதேச சட்டவிதிகளை மீறிய செயல் என வெறும் சட்டப்பிரச்சனையாக காட்ட முயல்வதையும்,

இந்திய தரப்பும் இதை தலை கீழாக்கி

பருத்தித்துறையிலிருந்து திருவனந்தபுரத்துக்கு வந்ததாகவும் கப்பலில் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இருந்ததாகவும் இந்திய கடற்பரப்பில் தாம் இடைமறித்தபின் அவர்கள் தம்மைத்தாமே தீமூட்டி அழித்து விட்டதாக சட்டரீதியாக நியாயம் கற்பிக்க முனைவதையும் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன.

புலிகளின் தலைமையகத்துடனும் வெளிநாடுகளுடனும் தொடர்பு கொள்ளக் கூடிய தொடர்பு சாதனங்களுடன் சென்ற 'எம்.வி..அகத்' கப்பலும் இந்தியக் கடற்படைக் கப்பலும் சுமார் 36 மணித்தியாலங்களாக கடற்பிராந்தியத்தில் எதிர் கொண்டு..... நடந்து முடிந்த ஒரு கொலைவெறி நாடகத்தின் உண்மை நிலையை சரிவர புரிந்துகொள்ள முடியாத நிலையிலேயே மக்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவைத்தான் விட்டுத் தள்ளினாலும், மக்களின் விடுதலைக்காக போராடும் ஒரு விடுதலை அமைப்பின் கூற்றுக்களை மக்கள் உண்மையாக எடுத்துக் கொள்ளும் ஒரு மானசீகமான உறவில் தன்னை நிறுத்திக்கொள்ளாத புலிகளின் செயற்பாடுகள் இந்த இடத்திலும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. அதாவது " புலிகள் சொன்னால் அது உண்மைதான்" என்று மனப்பூர்வமாக மக்கள் நம்பும் நிலையில் இல்லாத புலிகளின் 'நேர்மை' கிட்டுவின் விடயத்திலும் உண்மையை அறியமுடியாத நிலைமையை விட்டுச் சென்றிருக்கிறது.

மாற்று இயக்கங்களை கொன்றொழித்த முறைகள்,

கீழ்த்தரமான துணுக்காய் வதைமுகாம் சித்திரவதைகள்,

அப்பாவி முஸ்லீம் மக்களை யாழ்மண்ணை விட்டு விரட்டியதோடு நின்றுவிடாமல் அண்மையில் கிழக்கில் 4 முஸ்லீம் கிராமங்களில் குழந்தைகள், பெண்கள், முதியவர்களைக் கூட குருதி தெறிக்க வெட்டியும் சுட்டும் கொன்றொழித்த கோர நிகழ்வுகளும், அப்பாவி சிங்கள மக்கள்மீதான அனுராதபுர கொலைகளின் இரக்கமற்ற வெறிச்செயல் என்பனவெல்லாம் .....

'புலிகளின் உயர்மட்ட உறுப்பினர் என்ற வகையிலும் தளபதி என்ற வகையிலும்' கிட்டுவின் கொலையை மனிதாபிமான அடிப்படையில் புலிகள் விளக்க முற்படும்போது கூட தார்மீகப் பிரச்சினையை கொணர்ந்துவிடுகிறது.

மாற்றுக் கருத்துக்களையோ நடைமுறைகளையோ கொண்டிருந்தாலும் ஒரு 'போராளி' என்ற வகையில் கிட்டுவின் மரணம் பேரிழப்பாகும் என்று எழுதவரும்போது .......

மாற்றுக் கருத்துக்களையும் நடைமுறைகளையும் கொண்ட TELO, EPRLF

சந்தாவிபரம்:-

இலங்கை — இந்திய வாசகர்களுக்கு இலவசம்

தனிப்பிரதி 3sfr

ஒருவருட சந்தா 22 Sfr

ஐரோப்பிய நாடுகளிற்கான சந்தா 25 Sfr

Postchek Konto:-
30-37152-1
Manitham

Bank Konto:-
Schweizerische Kredit Anstalt
3001 Bern
Nr:- 220348-70



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'போராளிகளை' உயிருடன் கொழுத்திய குரூரமான நிகழ்வுகள் (அதுவும் கிட்டு தலைமை வகித்து நடத்தியது எனும்போது) குறுக்கே வந்துவிடுகிறது.

'கிட்டுவின் இழப்பு புலிகளுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு' என்று சொல்வது புலிகளைப் பொறுத்தவரை எந்தளவுக்கு உண்மை என்பதையும் நாம் பார்க்க வேண்டும். கிட்டுவின் மரணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து புலிகள் பிரச்சாரப்படுத்துவதுகூட அந்த இழப்பின் பாதிப்பில்தான் என எண்ணுவதற்கு அவர்களின் பழைய வரலாறுகள் இடம் கொடுக்குதுமில்லை. இந்தியாவுக்கெதிரான பிரச்சாரத்திற்கே இதை பயன்படுத்த முயல்வதுபோல் தெரிகிறது. திலீபனின் மரணப்போராட்டம் ஏற்படுத்திய ஒரு மக்கள் எழுச்சியுணர்வை பிரச்சாரப்படுத்தி திரைமறைவில் இந்தியாவுடன் (திலீபனின் அரசியல் கோரிக்கைகளுக்கு புறம்பான விதத்தில்) பேரம் பேசினார்கள் என்ற செய்தி நாட்கள் கழிந்து கசிந்து வந்ததை மக்கள் அறிவர்.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை ஆரம்பத்திலிருந்தே 2ம் கட்ட தலைமையொன்று உருவாகுவதை தலைமை விரும்பியதே கிடையாது. இவ்வாறானவர்கள் அழித்தொழிக்கப்பட்டார்கள் அல்லது ஓரம் கட்டப்பட்டார்கள். சுந்தரத்திலிருந்து தொடங்கி .... (தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக்கம் நடந்த பின்பு) ராகவன் முதற் கொண்டு ரகீம்....மாத்தையா.... என இது தொடர்கிறது. கிட்டு தளபதியாக இருந்த காலகட்டத்தில் இயக்கத்துள் கணிசமான செல்வாக்கைப் பெற்று தன்னை ஒரு 2ம் கட்ட தலைமைக்கு வளர்த்துக் கொண்டிருந்தார். அதன்போதே கிட்டுவின் கால் முடமாக்கப்பட்டது. ஆரம்பத்தில் மாற்று இயக்கத்தின் மீது இதற்கான பழி போடப்பட்டாலும் காலப்போக்கில் அதன் உண்மையும் வெளியே கசிந்தது. இப்போ மாத்தையாவும் 'மாத்தையாவின் ஆட்கள்' என்று கூறப்படும் 400 பேரும் புலிகளின் சிறையில் இருப்பதாக எழுந்துள்ள கதைகளை புலிகள் ஆதாரத்துடன் இதுவரை மறுக்கவுமில்லை.

இயக்கத்துக்குள் பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் பெரிதாகிக் கொண்டே வருவதாகவும், இதை விரும்பாத கிட்டு இருவருக்குமிடையில் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும் செய்திகள் வெளியாகின (வீரகேசரி, 24.1.93). அத்தோடு புலிகள் அமைப்பின் முக்கிய மாற்றங்களுக்காகவே கிட்டு யாழ் சென்றதாகவும் இன்னொரு செய்தி வெளியாகியது. கிட்டுவின் கொலையையும் அதன் பின்னணியையும் மதிப்பிடுவதில் இவ்வாறான செய்திகள் வேறொரு கோணத்தில் பலரை நிறுத்தவும்தான் செய்கின்றன.

ஒரு மனிதனின் மரணத்தில் யாரும் சந்தோசப்பட முடியாது என்பது ஒரு பொது நியாயம். வரலாற்றில் தாக்கங்களை ஏற்படுத்தும் ஒருவன் இந்த பொது நியாயத்தில் மேலும் கீழும் இயங்கவும் முடியும். இதை அவன் சமுதாயத்திற்கு ஆற்றிய பங்கு நிர்ணயிக்கும். எவ்வளவுதான் சாதனை படைத்தபோதும், மனித விழுமியங்களை காலில் போட்டு மிதித்தவர்களை வரலாறு வெறுமனேதான் கடந்து சென்றிருக்கிறது,

கிட்டு 'தளபதியாக' இருந்த காலம் ........

யாழ் நகரின் வீதிகளில் திசைதெரியாது.... அவலமாய் விழுந்தடித்து.... உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஓடிய TELO, EPRLF இளைஞர்களை –அதுவும் முக்கியமாக கிழக்கு மாகாண இளைஞர்களை– உயிரோடு பெற்றோல் ஊற்றி கொழுத்தியபோது...... இரத்தத்தை உறையவைத்த அலறல்களை மீறி,

வாசகர்களே !

உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் வரவேற்கிறோம்

www.tamilarangam.net

o பசிக் களையில் சோர்ந்து...... ஒரு பிடி சோற்றை உள்ளங்கையில் பிசைந்தபடி..... வாய்க்கருகில் கொணரும்போது..... பிணமாய் வீழ்த்தப்பட்ட அந்த இளைஞர்களின் அவலங்களை மீறி.

o சிறீசபாரத்தினத்தை கொன்றுவிட்டு.... இறந்த அந்த உடலின்மீது 'விரும்பினாக்கவெல்லாம் சுடுங்கடா' என பிணத்தை வக்கிரமாக சல்லடையாக்கிய அந்த வெறியை மறந்துவிட்டு.

o பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் உயிரோடு இருக்கிறானா? இல்லையா? என பெற்றதாய் கூட அறியாமல்...... கலங்கி அழுது..... ஊணுறக்கமின்றி உடல் தேய்ந்து சோர்ந்து போக..... 'அவன் கொல்லப்பட்டான்' என்றதும் பொருமி வெடித்து அலறிய அந்த தாயின் ஈனக்குரலையும் மீறி

கிட்டுவின் மரணம் ஏற்படுத்தும் அனுதாப அலை இன்னும் எவ்வளவு காலம்தான் தாக்குப்பிடிக்கும் !

தொடர்புகளுக்கு :-

Manitham
Postfach 12
3000 Bern 11
Switzerland

# அம்மா ......!

ஃ க. தீபன்

கண்டும் காணாதவனாய்
கண் கெட்ட சூரியன்.
செத்த மரங்கள்.

அவலக் கதறலை
விம்மலை
ரணத்தை
பிரியாமல் பிரியும்
உயிர்களின்
ஈனக் குரலை
கேட்டும் கேளாமலோடும்
செவிட்டு மாவலி

பிய்த்த சதைகள்
குண்டு துளைத்த
மண்டை முதுகு
கால்கள்
வெட்டியெறிந்த
முண்டங்கள்
முழி பிதுங்கிய

வெறும் தலைகள்
ஒன்றல்ல
இரண்டல்ல
நான்கு கிராமத்தில்
அம்மா !
என்ன முடியவில்லை
என்னால்

போயினர்:
நெஞ்சை நிமிர்த்தி
துவக்குடன்
குருதி தோய்ந்த
வாளுடன்
பள்ளி வாசலில்
பக்க தெருக்களில்
குருதி நீரினைக்
குடித்த களிப்பினில்.

ஆண்ட பரம்பரை
ஆண்டு
தொலைத்துப் போ !

www.tamilarangam.net

(சுவிசில்)

# தமிழ் இளைஞரைத் தாக்கிய துப்பாக்கிக் குண்டு

அன்று சனிக்கிழமை ( 13. 02. 93 ) அந்த இளைஞருக்கு லீவுநாள். மாலை நண்பர்களுடைய வீடுகளுக்குச் செல்கிறார். ஒரு சில நண்பர்களுடன் உணவு விடுதிக்குச் சென்று உணவருந்திவிட்டு வீடு நோக்கித் திரும்புகிறார். நண்பர்களுடன் சகஜமாகிப் பேசிச் சிரித்தபடி வருகிறார். Bern புகையிரத நிலையத்திற்குமேல் 5ம் நம்பர் ராம் வண்டிக்காக காத்திருக்கிறார். நண்பர்கள் விடைபெருகின்றனர். அப்போது நேரம் இரவு பத்துக்கும் பத்துமுப்பதுக்கும் இடையில் இருக்கும் திடீரென அந்த இளைஞருக்கு மிக அருகில் நின்ற நிறவெறியன் ஒருவனின் துப்பாக்கியில் இருந்து பாய்ந்த குண்டு இவரது தோள்முட்டை துளைத்துச் செல்கிறது. அதிர்ச்சியடைந்தவர் சுதாகரித்துக் கொண்டு துப்பாக்கியை தட்டப்போக அடுத்த குண்டு அவரது வலது பக்க மார்பில் பாய்கிறது. தாடி வைத்த தொப்பியணிந்த நிறவெறியன் மாயமாக மறைகிறான். பொங்கிவழியும் இரத்தத்தை கைகளால் பொத்திய படியே கீழேயுள்ள பொலிஸ் நிலையத்துக்கு ஓடுகிறார் அந்த இளைஞர். அங்கும் அவருக்கு கதவுகள் திறக்கவில்லை. பொலிஸ் நிலையம் மூடப்பட்டு விட்டது. அருகில் உணவு விடுதிக்கு சென்று முறையிட்டவர் மயங்கிவிழுகிறார். அம்புலன்சில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். நல்லவேளையாக உயிர்தப்பிவிடுகிறார்.

மேற்படி சம்பவம் Bern நகரத்தில் சகசமாக உலாவிவரும் தமிழர்கள் மத்தியில் கலக்கத்தையும், பயபீதியையும் உண்டு பண்ணியுள்ளது. நிற வெறியர்கள் எந்த உருவில் நடமாடுவார்கள் என்பதே இன்றுபெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. Bern புகையிரதநிலையம்; வெளிநாட்டவர்கள் அதிகமாக நடமாடும் இடம் இரவுவேளைகளிலும் சனசந்தடி மிக்க இடம். இத்தகைய இடத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது வெளிநாட்டவரின் குறிப்பாக தமிழர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமற்ற நிலையையே எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய நிறவெறி தாக்குதல்களைக் கண்டித்து சுவிசிலுள்ள வெளிநாட்டவர் ஆதரவுசக்திகளால் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களால் அவ்வப்போது கண்டன ஊர்வலங்கள் நடத்தப்படுவது வழமை. அதேபோல் மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தைக் கண்டித்தும் கண்டன எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் குறிப்பிட்ட அளவு சுவிஸ் மக்களே கலந்துகொண்டாராயினும், சம்பவம் நடைபெற்ற ஒருசில தினங்களில் இதை நடத்திக்காட்டியதானது எம்மீது அவர்கள் கொண்ட அனுதாபத்தையும், அத்தகைய நிறவெறி தாக்குதல்கள் மீது அவர்கள் கொண்ட வெறுப்பையும் எடுத்துக்காட்டுவதாகவும் இருந்தது. ஆயினும் கண்டன எதிர்ப்பில் தமிழர்கள் கலந்துகொள்ளாதது ( ஒரு சிலரைத்தவிர ) மிகவும் கவலைக்குரியது. இதற்கு அறிவிப்பு தெரிவிக்கப்படாதது, தமிழில் பிரசுரம் வெளியிடப்படாதது ஒருகாரணம் என்றபோதிலும் **பொதுவாக தமிழர்களுக்கு இத்தகைய நிகழ்ச்சிகளின்பால் உள்ள அக்கறையின்மையையும் அசட்டு மனப்பான்மையையும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.**

சம்பவத்தை நேரில்விசாரிப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றோம். அவரது நண்பர்கள் அவரைவந்துபார்ப்பதும் போவதுமாக இருந்தார்கள் துப்பாக்கிக் குண்டு துளைத்துக் கட்டுப்போட்ட இடங்களை நமக்குக்காட்டினார். நாம் "மனிதம்" பத்திரிகையில் இருந்து வந்திருப்பதாக தெரிவித்ததும் தனதுபெயரை பத்திரிகையில் போடவேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். தனக்கு அண்மையில் தான் திருமணம் ஆனதாகவும் ஊரிலிருக்கும் தனது மனைவி, பெற்றோர்கள், இதைக்கேள்விப்பட்டால் கலங்கிப்போய்விடுவார்கள் எனத் தெரிவித்தார். பெயரையே போடமுடியாதபோது படம்பிடிப்பதைப்பற்றி நாம்கேட்கவேயில்லை. அவரின் உணர்வுக்கு நாம் மதிப்பளிக்கும் அதேவேளையில் அவரைப்போன்றோர்கள் இதன் சமூகமுக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டுகிறோம். இது எல்லோருக்கும் பொதுவான பிரச்சினை என்பதையும் யோசிப்பது நல்லது. இதன்பின்னர் தனக்கு நடந்த சம்பவங்களை எம்மிடம் விபரித்தார். துப்பாக்கிச் சூட்டின்போது தனது உடம்பைத்துளைத்த குண்டு தோள்பட்டை சதையைச்சிதைத்து வெளியேறியது. இதனால் பொலிசாரிக்கான தடையம் கிடைக்காமல் போய்விட்டது என தெரிவித்தார். நாம் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினோம். வைத்தியசாலையை விட்டு வெளியேவந்த பின்னும் அவர் இறுதியாக சொன்ன வார்த்தைகள் நம்காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "நாட்டில் நிற்கும் போது படவேண்டியகுடு இங்குவந்தும் பட்டிருக்கிறது. "

www.tamilarangam.net

# தமிழ்-இலக்கிய-வரலாற்றில்-ஒரு-மைல்-கல்!

## கலாநிதி க.கைலாசபதியின் 10வது ஆண்டு நினைவாக ....

கலாநிதி க.கைலாசபதி (1982 டிசம்பரில்) காலமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் பதிப்புக்காக டாக்டர் மே.து.ராசுகுமாரிடம் (மக்கள 'வெளியீடு, சென்னை) அவரினால் அனுப்பப்பட்ட கடைசி நூல் ***"ஈழத்து இலக்கிய முன்னோடிகள்"*** (இந் நூல் பின் 1986 அக்டோபரில்தான் வெளியாகியது)

"உலகளாவியதாய் உருப்பெற்றுவரும் தமிழ் இலக்கிய ஆய்வு விருத்தியின் பிரிக்கவியலாத அம்சமாகவே ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வும் கடந்த சில வருடங்களாகப் பரிணமித்து வளர்ந்திருக்கிறது. ஈழத்து நவீன இலக்கியத்தின் ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருக்கும் நான் அதன் ஊற்றுக்களையும் மூலங்களையும் தேடியபோது பின்னோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அரும்பிய சில செல்நெறிகளும், கருத்தோட்டங்களும், இருபதாம் நூற்றாண்டிலே மலர்ச்சி பெற்று மேலும் செழுமையடைவதைக் காணமுடிந்தது."

இவ்வாறு மேற்படி நூலின் முன்னுரையில் ஈழத்து நவீன இலக்கியத்தின் ஊற்றுமூலம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே கருக்கொண்டிருந்தமையின் பேறாக ஈழத்து இலக்கிய முன்னோடிகளாக விளங்கிய ஆறுமுக நாவலர், பத்திராதிபர் சரவணமுத்துப்பிள்ளை, அம்பலவாண நாவலர், நாவலாசிரியர் நாகமுத்து, பாவலர் துரையப்பாபிள்ளை ஆகியோரது இலக்கியப் பணி பற்றிய ஆய்வினை மேற்கொண்டார்.

நுணுகி நோக்கின் இன்னும் சில தசாப்தங்கள் கழிந்து "ஈழத்து இலக்கிய முன்னோடிகள்" பற்றி எழுத முற்படும் ஓர் ஆய்வாளன் மேற்கூறிய இலக்கிய முன்னோடிகளுடன் கூடவே கைலாசபதியின் இலக்கியக் கடமைகளையும் ஆய்வுசெய்யக் கடமைப்பட்டவன் என்பது புலனாகும்.

1933 ம் ஆண்டு கோலாலம்பூரில் பிறந்த கைலாசபதி இரண்டாவது உலக யுத்தத்தின் பின்பு தமது இளமைப் பருவத்தில் இலங்கையில் யாழ் இந்துக் கல்லூரி மாணவனாகச் சேர்க்கப்பட்டார். யாழ்ப்பாணத்துச் சூழலும், இந்துக் கல்லூரியும் கைலாசபதியின் திறனாய்வுக்கு இரண்டு அம்சங்களில் கால்கோளாய் அமைந்தது எனலாம்.

ஒன்று, நாவலர் போன்ற இலக்கிய முன்னோடிகளை அறிந்துகொள்வதற்கு யாழ்பாணத்துச் சூழல் வகைசெய்தது.



கவிஞர் ரெவி அலியுடன் கைலாசபதி

இரண்டு, யாழ்பாணத்தில் மாக்சிச ஆசானாகத் திகழ்ந்த மு.காத்திகேசன் மாஸ்ரரின் (இந்துக் கல்லூரியில்) மாணவனாகத் திகழ்ந்தமை. வசதியான குடும்பத்தில் பிறந்த கைலாசபதி மாக்சிசத்தின்பால் ஈர்க்கப்பட்டமை குறித்து கார்திகேசன் மாஸ்ரர் நகைச்சுவையாக கூறிய கூற்றொன்றினை எஸ். அகஸ்தியரின் வாய்மொழியினூடாக கீழே பார்ப்போம்.

"எனது மாணவர்களிற் பலர் மேல்லோகம் செல்வதற்கான சுலுவான வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் கரங்களில் தேவாரம், திருவாசகம், பைபிள் இருக்கும். அவர்களில் மாறுபட்ட வலு சுட்டியான ஒரு மாணவன் மானிடவியல், சமூக விஞ்ஞானப் புத்தகங்களை வைத்துக் கொண்டு தடுமாறினான். அவன் புரியும்படியாக விளக்கி வைத்தேன். பிறகு அவன் பூலோகத்தைப் பார்க்கத் தலைப்பட்டுவிட்டான். கூடவே கம்யூனிச சித்தாந்தவாதியானான். அவர்கள் வானம்பார்த்த பூலோகவாசியானர்கள். இவனோ பூலோகத்தைப் பார்த்த சமூக விஞ்ஞானி ஆகினான். அந்த மாணவன்தான் கைலாசபதி."

(தாயகம்– 21இல் கலாநிதி சி. தில்லைநாதன்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைலாசபதியின் சமூகவியல் நோக்கிலான இலக்கிய ஆய்வுக்கான ஆதாரமே இங்குதான் பிறப்பெடுக்கிறது. கைலாசபதியின் இவ் ஆய்வு பற்றி நோக்குவதற்கு முன்பாக ஈழத் தேசிய இலக்கியத்தில் கைலாசபதியின் பங்கினை நோக்குவோம்.

"ஈழத்துத் தேசிய இலக்கியம்" பற்றிய கருத்தியல் 1946 இல் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் தோற்றம் பெற்றபோதும், அதற்கான களத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை. இதற்கு பத்திரிகை வாய்ப்பின்மை ஒரு காரணமாக அமைந்தது. அச் சந்தர்ப்பத்தில் இந்திய ஆக்கதாரர்களின்ஆக்கங்களே இலங்கை பத்திரிகைகளை நிரப்பிக்கொண்டிருந்தன. "இலங்கையருக்கு இது கைவராதது" என்ற கருத்தும் விரவியிருந்த நேரம்!

கைலாசபதி பல்கலைக் கழகப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு 1957 இல் தினகரன் பத்திரிகையில் ஆசிரியராகச் சேர்ந்து 59 இல் அதன் பிரதம ஆசிரியர் ஆனார். ஏரிக்கரைப் பத்திரிகையின் தன்மை பற்றி பலவாறு அறிந்திருந்தபோதும், அப் பத்திரிகையை பயன்படுத்தும் நோக்கிலேயே (உழைப்பு நோக்கில் வேறு பல உத்தியோகங்களுக்கான சந்தர்ப்பங்கள் இருந்தபோதும்) அதன் ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார் என்பது அவரது செயல்திறன்கள் மூலம் வெளிப்பட்டன.

தினகரனுக்குப் பொறுப்பாய் இருந்தபோது கைலாஸ் எழுத்தாளர்களை அடிக்கடி சந்தித்து ஆலோசனைகளையும் விவாதங்களையும் நடத்தியதுடன், பத்திரிகைக்கான பல விடயங்களைத் திட்டமிட்டார். அத்தகைய கலந்தாலோசனைகளிற் பங்குபற்றியவர்களுள் இளங்கீரன், கா.சிவத்தம்பி, பிரேம்ஜீ, எச். எம். பி. முகைதீன், ப. ராமநாதன், சில்லையூர் செல்வராசன், இ. முருகையன், கே. கணேஸ், அ.ந.கந்தசாமி, முகம்மது சமீம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாகலாம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கைலாசின் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக அமைந்தது.

மிகக் குறுகிய காலத்தில் கைலாஸ் தன்னோடு ஒத்த கருத்துடையவர்களுடன் மட்டுமின்றி ஏனைய எழுத்தாளர்களுடனும் நேசபூர்வமான தொடர்பினை வளர்த்துக்கொண்டார். கலந்தாலோசனைகளிற் பங்குபற்றியவர்கள் என்று மேலே குறிப்பிட்டவர்களோடு வரதர், வ.அ.இராசரத்தினம், நந்தி, கனகசெந்திநாதன், சிற்பி, தேவன், அ.முத்துலிங்கம், உதயணன், கச்சாயில் இரத்தினம், மகாகவி, நீலவாணன், நாவற்குழியூர் நடராசா, செ.கணேசலிங்கன், என்.கே.ரகுநாதன், கே.டானியல், எஸ்.பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, பெனடிக்ற் பாலன், இ.நாகராசன், யாழ்நங்கை, அ.ஸ.அப்துல் ஸமது, காவலூர் இராசதுரை, குறமகள், ஈழத்துச் சோமு, நீர்வை பொன்னையன், ஏ.இக்பால், எஃப்.எக்ஸ்.சி.நடராசா முதலியோரும் தினகரனில் எழுதலானார்கள்.
(தாயகம்–21)

இத்தகைய செயல்முறைகளுடன் கூடவே பல புதிய அம்சங்களும் பரிசோதனைகளும் தினகரனில் இடம்பெற்றன என்று பல விடயங்களை விளக்குகிறார். கைலாசபதியை அடுத்து தினகரன்ஆசிரியராகப் பதவியேற்ற பேராசிரியர் வி.தில்லைநாதன்.
(தாயகம்– 21 )

எழுத்தாளர்களை ஊக்குவித்தும் இலைமறை காய்களாயிருந்த ஆக்கதாரர்களை வெளிக்கொணர்ந்தும், வாசகர்களின் தரத்தினை உயர்த்தி அவர்களின் இலக்கிய ரசனையை மாற்றியதும் கைலாசபதி (தினகரன்ஆசிரியராய் இருந்தபோது) தமது செயற்திறன்மூலம் ஈடேற்றிய சாதனைகள் ஆகும்.

1961 ஜுலையில் தினகரன் ஆசிரியர் பதவியிலிருந்து விலகி பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பதவியேற்ற கைலாசபதி அங்கும் இலக்கிய ஆர்வலர்களை இனங்கண்டு வழிப்படுத்தி உற்சாகப்படுத்தினார். செ.இ.யோகநாதன், எஸ்.மௌனகுரு, கலாநிதி பார்வதி கந்தசாமி, எம்.ஏ.நுஃமான், சித்திரலேகா மௌனகுரு, இ.சிவானந்தன், செ.யோகராசா, மறைந்த செ.கதிர்காமநாதன் ஆகிய அனைவரும் கைலாசபதியின் வழிகாட்டலில் உருவாகிய இலக்கிய கர்த்தாக்கள் எனலாம்.

மேலும் ஈழத்து ஆக்கதாரர்களுக்கான தனித்துவத்தை மேன்மைப்படுத்தி "ஈழத்துத் தேசிய இலக்கியம்" எனும் கருத்தாக்கம் வலிமைபெற வழிவகுத்ததில், அதற்கான சமூகவியல் தளத்தை உருவாக்கியதில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் கூடவே கைலாசபதியின் பங்கும் முதன்மை பெறுகிறது.


இன்று தமிழகத்து விமர்சகர்களாலும் ஈழத்து கலை இலக்கியத்தின் தனித்தன்மை, அதன் விழுமியங்கள் போற்றப்படுவது கண்கூடு. ஈழத்துத் தேசிய இலக்கியத்தினது ஊற்றுமூலம் ஆறுமுகநாவலரிடம் இருந்து தொடங்குகிறது என்பது கைலாசபதியின் ஆய்வு. ஆனால் ஈழத்துத் தேசிய இலக்கியத்தில் சமூகவியல் விஞ்ஞானப் பார்வையுடன் கூடிய நவீன இலக்கியத்திற்கான ஒரு தளம், அல்லது அதற்கான ஒரு மரபு கைலாசபதியினாலேயே நிலைநிறுத்தப்படுகிறது என்றால் மிகையாகாது.

ஆனால் ............................ (அடுத்த இதழில் )

— வி. லோகதாஸ் —

www.tamilarangam.net

# இந்தியாவில் இந்து மதவெறி – அன்றும் இன்றும்



வரதன்

கடந்த சில வருடங்களாக இந்திய அரசியலில் அதிகாரபூர்வ அங்கத்துவத்தை எடுத்துக்கொண்ட மதவெறிக் கட்சியான பாரதீய ஜனதாவும், ஆர் எஸ் எஸ், விஷ்வ இந்து பரிஷத், சிவசேனா, பஜ்ரங்தளத், இந்து முன்னணி போன்ற அதன் சக இந்து மதவெறி அமைப்புகளும் தமது மதவெறி நடவடிக்கைகள் மூலம் ஏற்கனவே பலநூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்களை படுகொலை செய்து விட்டனர். அதன் உச்சக்கட்டமாக கடந்த டிசம்பர் மாதம் 6ந் திகதி அயோத்தியில் 2000க்கும் மேற்பட்ட மக்களை பலிகொண்டதன் மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாபர் மசூதியை இடித்து, ராமர் கோவில் கட்டப்பட்டுவிட்டது. அதனைத் தொடர்ந்து மேற்குவங்கம், கேரளம், உட்பட பல்வேறு மாநிலங்களிலும் கலவரம் பரவி தினமும் நூற்றுக்கணக்கானோரைப் பலிகொண்ட வண்ணம் உள்ளது. இந் நிலைமைகளை இந்திய அரசும் அதன் காவல் படையும் கைகட்டி வேடிக்கை பார்ப்பதுடன் ஊக்குவித்தும் வருவதாக சர்வதேச பத்திரிகைகளே கண்டனம் செய்யும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்தியா என்ற தேசத்திற்கு மதக்கலவரம் என்பது இதுதான் முதற்தடவை என்று கூறுவதற்கில்லை. இந்துமதமானது இந்தியாவில் தோற்றம் பெற்ற ஏனைய மதங்களை தனது வன்முறை நடவடிக்கைகள் மூலமாக அழித்து எவ்வாறு தன்னை இந்தியாவில் நிலை நிறுத்தி வந்ததோ அதே வழிமுறையின் ஊடாக இஸ்லாமிய மதத்தையும் ஒடுக்குவதற்கு முனைந்துள்ளது. எனவே இன்றுள்ள நிலைமைகளை இந்தியாவின் கடந்த கால வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும் அதன் பின்னணியிலேயே இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

இந்தியாவின் ஆரம்பகால வரலாற்றோடு தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்ற இந்துமதத்தினது அடிப்படைத் தத்துவங்களான வேத. உபநிடத வர்ணாச்சிரமக் கருத்துக்களின் கடுமையான விதிமுறைகளோடு இணைந்துகொள்ள இயலாத நிலையில் பௌத்த, சமண மதங்கள் தோற்றம் பெற்றன. பௌத்த மதமானது அசோக மன்னனது பேரரசுக் காலத்தில் இந்தியாவிலும் அதற்கு வெளியிலும் (இலங்கை, பர்மா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளில்) பரவியது. அசோகனது வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் இந்துமதமானது இந்து அரசர்களது துணையுடன் வளர்ச்சியுற்றது. அதன்மூலம் பௌத்த மதத்தை இந்தியாவில் இருந்தே துடைத்தெறிந்து கொண்டது. புத்தர் இந்தியாவில் பிறந்திருந்தும் அம் மதம் இநதியாவில் இன்று இல்லை என்று கூறும் அளவிற்கு இந்துமதத்தால் ஒடுக்கப்பட்டுவிட்டது.

அதன் பின்னர் தோற்றம்பெற்ற சமண மதமானது பல்லவ மன்னர்களது ஆட்சிக்காலத்தில் ஓரளவு வளர்ச்சியடைந்த போதிலும் அக்காலத்தில் இந்துமதத்தினது பிரச்சாரமும் தொடர்ந்துவந்த சோழப் பேரரசின் எழுச்சியும் அம் மதத்தையும் இந்தியாவில் இருந்து அகற்றி இந்து மதத்தை இந்தியாவிற்கு வெளியிலும் கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந் நடவடிக்கைகளின் மூலமாக ஏறத்தாழ 4 நூற்றாண்டுகள்வரை இந்தியாவின் ஏகமதமாக இந்துமதம் தன்னைப் பேணிவந்தது.

13ம், 14ம் நூற்றாண்டுகளில் மத்திய ஆசிய பிரதேசத்தில் இஸ்லாமிய மதம் வளர்ச்சி பெற்று அரசுகளை அமைத்து பலம் பொருந்தியதாகக் காணப்பட்டது. இக் காலகட்டத்தின் ஆரம்பத்தில் வியாபார நோக்கங்களுக்காக இந்தியாவின் வடமேற்கு எல்லையினூடாக இஸ்லாமியர்கள் இந்தியாவில் குடியேற ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய மன்னர்களது படையெடுப்பு இந்தியாமீது மேற்கொள்ளப்பட்டது. அதன்மூலம் இந்தியா அவர்களது ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது. இதன்விளைவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடஇந்தியாவில் செறிவாகவும் ஏனைய பிரதேசங்களில் வர்த்தக நோக்கங்களுக்காகவும் இஸ்லாமியர் பரவலாகக் குடியேறினர். இதே காலகட்டத்திலேயே முஸ்லிம்களது வணக்கத் தலங்களும் அமைக்கப்பட்டது (டெல்லி ஜும்மா பள்ளிவாசல், தாஜ்மகால், பாபர் மசூதி போன்ற இன்னும் பல).

இவர்கள் இந்தியாவைக் கைப்பற்றிய போதும் இந்துமதத்தின்மீது பாரிய அடக்கு முறையை பிரயோகிக்காமல், தமது மத அரசர்களுடன் தொடர்ச்சியான யுத்தங்களில் ஈடுபட்டமையினால் இந்துமதமானது பாதிப்புக்குள்ளாகவில்லை. அத்துடன். இஸ்லாத்தில் மதம் ஒரு பிறப்புரிமை என்பதால் தமது மதத்தைப் பரப்புவது என்பதைவிட இந்தியாவின் வர்த்தகத்திலேயே அதிகம் ஈடுபட்டமையும் இந்துமதம் பாதிக்கப்படாமைக்கு காரணமாகும். இக்காலகட்டத்தில் இந்துமத மறுமலர்ச்சி இயக்கங்கள் முளைவிட ஆரம்பித்தமையால் அவர்களது பிரச்சாரம் இந்துமதத்தை தொடர்ந்து பேணிப்பாதுகாக்க உதவியது.

15ம் நூற்றாண்டில் போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்த போதிலும் அவர்களால் முழு இந்தியாவையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியவில்லை. இவர்களை முறியடித்து பிரிட்டிஸார் இந்தியா முழுவதையும் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தனர். இதன்மூலம் இஸ்லாமிய மன்னர்கள் வசமிருந்த இந்திய ஆட்சி அதிகாரமும் வர்த்தகமும் பிரிட்டிஸார் வசமாகியது. இம் மாற்றத்துடன் இஸ்லாமிய மதத்தின் வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அற்றுப்போனது. அத்துடன் ஆங்கிலேயரது மதமாற்றத்திற்கு இஸ்லாமிய மதக்கோட்பாடுகள் இடம் கொடாமையாலும் ஆட்சி அதிகாரம் பறிக்கப்பட்டமையாலும் இவர்களுக்கிடையே பெரும் இடைவெளி ஏற்பட்டு இந்திய அரசியலில் எதிர்காலத்தில் பங்கெடுக்க முடியாதவர்களானார்கள்.

ஆனால் மறுபுறம் இந்துமதமானது இம் மதமாற்றங்களுக்கெதிரான தனது அமைப்புரீதியான பலமான பிரச்சாரங்களினூடாக வளர்ந்து இந்தியாவின் சுதந்திரத்திற்காக குரல்கொடுக்குமளவிற்குத் தன்னை வளர்த்துக்கொண்டது. (இந்திய சுதந்திரப் போராட்டத்தை வளர்த்துவிட்டதில் கிறிஸ்தவ மதமாற்றத்திற்கெதிரான இந்துமத பிரச்சார நடவடிக்கைகள் குறிப்பான பங்களித்ததென்பதை மறுப்பதற்கில்லை). அதேநேரம் முஸ்லிம்களும் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு விரட்டுவதற்கான போராட்டத்தில் கணிசமான பங்கைச் செலுத்தினர். இம் மக்களையும் சுதந்திரப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டிய தேவை தவிர்க்கமுடியாது ஏற்பட்டபோது இவர்களையும் இணைத்து இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் எதிர்பார்த்தவாறே இந்துத் தலைமைகள் தமது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியதன் விளைவாக பாகிஸ்தான் தனிநாடாக இந்தியாவில் இருந்து பிரிய நேர்ந்தது. இக்காலத்திலிருந்தே இஸ்லாமியருக் கெதிரான கருத்துக்கள் அரசியல் நோக்கங்களுக்காக இந்திய மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்டு வரலாயிற்று. பாகிஸ்தான் பிரிந்த பின்னரும் இரண்டுமுறை யுத்தம் தொடுத்து, தனக்கு எதிரான பலமான நாடாக இருக்கக்கூடாது என்பதற்காக அதனைத் துண்டாடி வங்காள தேசத்தை உருவாக்கியதுடன், பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களின் உயிரையும் பலிகொண்டது. இந்திய அரசு இன்றுவரையும் தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் காஷ்மீர் மக்களது போராட்டத்தை இந்துக்களுக்கெதிரான முஸ்லிம்களின் தாக்குதல்களாகப் பிரசாரம் செய்தே ஓட்டுப் பொறுக்கி வந்துள்ளது.

இன்றைய இந்துவெறி அமைப்புகள் சுதந்திரத்திற்குப்பின் இன்றுள்ள அளவிற்கு முன்னணிக்கு வரமுடியாததற்கு காரணம் அதனது பாத்திரத்தை காங்கிரஸ்கட்சி சரிவர ஆற்றிவந்தமையேயாகும். நேரு பரம்பரைக்கு –குறிப்பாக இந்திரா காந்திக்கு– இருந்த தனிப்பட்ட செல்வாக்கு, சுதந்திரப்போராட்டத்தில் பங்கெடுத்த இந்து தலைமைகள் (இந்திய மேல் வகுப்பினர்) கட்சியில் இருந்தமை, ஜனாதிபதி மாநில முதலமைச்சர்கள் போன்றவர்கள் இந்துக்களாக இருந்தமை போன்ற காரணங்கள் காங்கிரஸை ஒரு இந்துமதக் கட்சியாகவே மறைமுகமாக வெளிப்படுத்திக் கொண்டுவந்தது. இதனைமீறி இவ்வெறியர்களால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளமுடியவில்லை.

அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி நாட்டில் பாசிசத்தை கட்டவிழ்த்து விட்டதற்காக இந்திராகாந்தி தேர்தலில் தோல்வி அடைந்தபோது இன்றைய மதவெறியர்களுக்கு தலைமைதாங்கும் வாஜ்பாய், மொரார்ஜி தேசாய் போன்றோர் அதிகாரத்திற்கு வந்தமையை சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். இந்திரா காந்தியின் மரணத்தின் பின்னர் ராஜீவ் தலைமையில் இடம்பெற்ற ஊழல், பதவி போட்டிகளின் மூலம் தமது பாத்திரத்தை தக்கவைக்கமுடியாது போனபோது அதனை தமக்கு சாதகமான சூழ்நிலையாக பற்றிக்கொண்டு மதவெறி அமைப்புகள் வளர்ச்சியடைய ஆரம்பித்தன. வி.பி.சிங்கின் ஜனதா தளம் ஆட்சி அமைத்தபோது வெறும் 18 ஆசனங்களையே பெற்ற பாரதீய ஜனதா கடந்த தேர்தலில் 120 ஆசனங்களைப் பெற்று எதிர்கட்சியாகவே மாறியது. அத்துடன் 4 மாநிலங்களில் சட்டசபைகளிலும் வெற்றிபெற்றது.

www.tamilarangam.net

அடுத்து கவனிக்கப்படவேண்டிய விடயம்— பொலிஸ் இராணுவம் உட்பட இந்திய காவல் துறை பற்றியது. இந்திய இராணுவமானது என்றைக்குமே ஒரு நடுநிலையானதாக நடந்து கொண்டதற்கான ஆதாரத்தை அதன் வரலாற்றில் காணமுடியாது. பாகிஸ்தானுடன் நடத்திய யுத்தங்களின் விளைவாக இஸ்லாமிய எதிர்ப்புணர்வு வளர்க்கப்பட்டு, இன்றும் எந்தநேரத்திலும் பாகிஸ்தானுடன் மோதுவதற்கு தயார்நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் சொந்த நாட்டு மக்களென்ற எந்தவித அனுதாபமும் இன்றி முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக குழந்தைகள், பெண்கள், முதியோர் என்ற பாகுபாடின்றி கொலைசெய்தும் சித்திரவதை செய்தும் வருகின்றது. ஏன், பாபர் மசூதி இடிப்பின்போது விசேட ராணுவ அணிகள் அனுப்பப்பட்டும் அவை – ஆயிரக்கணக்கான மக்களை இந்து வெறியர்கள் கொலை செய்தமையை எதிர்த்து— எந்த நடவடிக்கையும் எடுக்காது, மதவெறியர்கள் தடை வேலியை கடப்பதற்கு உதவி செய்ததையெல்லாம் மேற்குலக தொலைக்காட்சிகள்கூட படம்பிடித்தன. அரசே கவிழும் நிலையில்கூட இந்து வெறியர்களுக்கு சார்பாகவே இராணுவம் செயற்பட்டது.

அதைவிட கடந்த ஆண்டு அத்வானியால் மேற்கொள்ளப்பட்ட ரத யாத்திரைக்கு வாள், சூலம், துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடன் முஸ்லிம்கள் வாழும் கிராமங்களுடாக ஊர்வலம் செல்வதற்கு அனுமதியளித்ததன்மூலம் தனது ஒத்துழைப்பை வழங்கியது. அத்துடன் இப் பகுதிகளில் வலிந்தும் இயல்பாகவும் எழுந்தகலவரங்களில் இந்து வெறியர்களுடன் சேர்ந்து தானும் முஸ்லிம்களை வேட்டையாடியது. ரத யாத்திரையின் இறுதியில் காஷ்மீரில் தமது கொடியை நாட்டுவதாக அத்வானி கும்பல் தீர்மானித்திருந்தது. காஷ்மீரை நெருங்கியபொழுது காஷ்மீர் விடுதலைப் போராளிகளின் தாக்குதலால் ஊர்வலம் சிதறி ஓட, குறிப்பிட்ட சில தலைவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து கொடி நாட்டச் செல்வதற்கு இராணுவ விமானமும் ஒழுங்குசெய்து கொடுத்தது.

முன்னர் இராணுவ தலைமைப் பீடம் இந்திரா காந்தியின் கொலையையொட்டி 5000 சீக்கியர் படுகொலை செய்யப்பட்டபோது கைகட்டி நின்றது. இலங்கை ஆக்கிரமிப்பின்போது கைக்கூலி அமைப்புக்களைக் கொண்டு கிழக்குவாழ் முஸ்லிம்களை வேட்டையாடியது. புலிகளுக்கெதிராக யுத்தம் புரிந்துகொண்டிருந்த காலகட்டத்தில்கூட தனது கட்டுப்பாட்டில் இருந்த மூதூர் பகுதியில் முஸ்லீம் கிராமமொன்றைச் சுற்றி வளைத்து முஸ்லீம்களைப் படுகொலை செய்தபோதும் கண்டும் காணாமலே இருந்தது. இவ்வாறாக அதன் வரலாறே இந்துமத சார்பாகவே இருந்து வந்துள்ளது.

மேற்கூறிய ஆதாரங்களின் ஊடாக இந்து மதமானது ஏனைய மதங்களின்மீது தனது கொடிய அடக்கு முறையை எவ்வாறு பிரயோகித்து வந்துள்ளது என்பதைக் காணமுடிகின்றது.. இதன் தொடர்ச்சியாகவே இன்றைய அயோத்தி நிகழ்வுகளையும், அதனைத் தொடர்ந்து பரவிவரும் இந்துவெறிக் கலவரங்களையும் நோக்க வேண்டியுள்ளது..

இந்துவெறி அமைப்புக்கள் குறுகிய காலத்தில் உறுதியான அமைப்பு வடிவம் பெற்று ஆட்சியில் உள்ள அரசின்மீதே அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து ஆட்சியை விட்டு விரட்ட முனைந்து வருகின்றது. சுதந்திரத்திற்குப் பின் பலமான கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி இன்று தலைமைப் போட்டிகளால் பல குழுக்களாக பிரிந்து உள்ளுக்குள் மோதிக் கொண்டிருக்கின்றது. வி.பி.சிங் இனது ஜனதாதளம் ஒப்பீட்டளவில் காங்கிரசைவிட இந்து வெறியர்களுக்கு எதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்தபோதிலும் இன்று பல முக்கிய அங்கத்தவர்கள் வெளியேறிய நிலையில் எதுவுமே செய்ய முடியாததாகி விட்டது.

திராவிட அமைப்பக்களால் செய்யப்பட்ட பகுத்தறிவுப் பிரச்சாரங்களினது தாக்கம் அழிந்துபோன நிலையில் தமிழ் நாடும், 'கம்யூனிஸ்ட்' கட்சிகளின் மாநில அரசுகளின்கீழ் இருந்த மேற்கு வங்கம் , கேரளா போன்ற மாநிலங்களிலும் கலவரங்களும், மசூதி இடிப்புக்களும் இடம்பெறுமளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

அத்துடன் ஆளும் அரசின் பொருளாதாரக் கொள்கைகளும், அரச, வங்கி, நீதித்துறை போன்றவற்றின் ஊழல், அதிகார முறைகேடு போன்றவற்றின்மீது அதிருப்தி அடைந்துள்ள மக்களை மதவெறியர்கள் தம்பக்கம் இழுத்துக் கொள்வதில் இலகுவாக வெற்றியடைந்து விடுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக பதவியில் இருக்கும் அரசும் அதன் பிரதமர் நரசிம்மராவும் இந்து வெறியர்களின்மேல் நடவடிக்கை எடுத்தால் தனது பதவி பறிபோய்விடும் என்ற பயத்தில் எதிர்ப்பதற்குப் பதிலாக அவர்களை ஆதரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் தமது மூலதனமாக வைத்து இந்துமத வெறியர்கள் இன்னும் பலமாக தமது வெறி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிகுறிகளே இன்று தென்பட ஆரம்பித்தள்ளது.

*

www.tamilarangam.net

கருத்தாடல் :

விடுதலைப் புலிகள்

# தேசிய சக்தியும் பாசிச சக்தியும்

சென்ற இதழில் (மனிதம்–19) – **விடுதலைப் புலிகள் தேசிய சக்தியும் பாசிச சக்தியும்** என்ற சிவசேகரத்தின் கட்டுரை சார்பாக சில வாசகர் மனிதம் மீது ஆவேசப்பட்டுள்ளனர். தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகள் பற்றிய மதிப்பீட்டில் ஏற்கனவே கிருஸ்ணகுமார், கரிகாலன் போன்றோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தமை வாசகர்கள் அறிந்ததே. தொடர்ந்து இவ் இதழில் மூ.சிவகுமாரன் தமது கருத்துக்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். இப் பகுதியில் தொடர்ந்தும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்படி அரசியல் ஆர்வலர்கள், வாசகர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஆ–ர். குழு

**– சில குறிப்புகள்**

தேசியப் பிரச்சனை குறித்து இன்று ஒரு தொடர்ச்சியான விவாதங்கள் நிகழ்ந்து வருகின்றன. இவ்விவாதத்தில் தாய்நாட்டில் இருந்தும் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட சக்திகள் பங்கு கொள்கின்றனர். தூண்டில், சமர், மனிதம், தேடல், உயிர்ப்பு என்று பல சஞ்சிகைகளில் இவ்விவாதங்கள் நிகழ்கின்றன.

இவ் விவாதத்தில் பங்கு கொள்ளும் சக்திகள் யார்? இவர்களின் நோக்கம் தான் என்ன?

தேசிய விடுதலைப் போராட்டம் சிதறிப்போய் புலிகளாக குறுக்கப்பட்ட தேக்கமான நிலையில் இருந்து போராட்டத்தை மீட்டெடுத்து சரியான திசையில் ஆற்றுப்படுத்த விரும்புபவர்கள்:

ஜனநாயக, முற்போக்குவாதிகள், புரட்சியாளர்கள் ஆகிய இவர்கள் எல்லோருமே ஒரு மூன்றாவது அணியின் தேவையை உணர்ந்தவர்களாக இவ்விவாதத்தில் ஈடுபடுகின்றனர். இவ் அடிப்படையில் பார்த்தால் இத்தகைய விவாதம் அவசியமானதும் ஆரோக்கியமான திசையில் கொண்டு செல்லப்படவேண்டியதுமாகும்.

ஆயினும் இவ்விவாதம் ஆரோக்கியமாக நிகழ்த்தப்படவில்லை என்பதை உயிர்ப்பு, மனிதம் ஆகியவை குறிப்பிடும் விவாதப் பண்புக்கருத்துக்களில் இருந்து அவதானிக்க முடிகிறது.

மனிதம் 18இல் வெளிவந்த ' விமர்சனமா தாக்குதலா ' இதை மேலும் தெளிவாக்கிறது.

இதுதான் பிரச்சனை:
மனிதத்தில் கரிகாலன் என்ற கட்டுரையாளர் 'புலிகள் முதலாளியத் தேசியவாதிகளோ அன்றி ஏகாதிபத்தியம், தரகுமுதலாளியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளோ அல்ல' என்று ஒரு கட்டுரையையும் உயிர்ப்பு சஞ்சிகை–1 மீது ஒரு விமர்சனமும் எழுதியிருந்தார். சமர் சஞ்சிகையோ கரிகாலனின் ஆக்கங்களை மனிதத்தின் கருத்துகளாகக் கருதியதோடு மனிதத்தை திரிபுவாதிகள் என்று முத்திரை குத்தும் நிலைக்கும் சென்றது.

ஒரு சாதாரண நபராக அன்றி பத்திரிகையாளர்களாக இருக்கும் சமர் இப்படி ' அவசரகளத்தில் குதித்தது ' மனிதத்தை மட்டுமல்ல எம்மைக்கூட விசனத்துக்கு உள்ளாக்கியது. சமரை இந்நிலைமைக்கு கொண்டுவந்த காரணம்தான் என்ன? கட்டுரையாளர் கரிகாலன் லெனினிச கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்துக்கு உட்படுத்த வேண்டும் என்கிறார். புலிகள் யாருடைய பிரதிநிதிகளும் இல்லை என்கிறார். இதை சமரால் பொறுக்க முடியவில்லை. மாற்றுக்கருத்துக்களுக்கு கருத்துக்களால் முகம் கொடுக்கும் பண்பை மறந்து ஒருவகை தாக்குதலுக்குள் இறங்கி விடுகிறார்கள். இங்கு உள்ளார்ந்தமான பிரச்சனை என்னவெனில் மாக்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ கேள்விக்குட்படுத்துவதையோ சமர் விரும்ப வில்லை என்பதுதான். 'மார்க்சியத்தை விமர்சித்தாலும் பறவாயில்லை' என்ற தொனியும் இதைத்தான் வெளிப்படுத்துகிறது. இந்தப்போக்கே கட்டுரையைப் பிரசுரித்த சஞ்சிகைமீதே திரிபுகளாக முத்திரை குத்தும் நிலைக்கு சென்றுவிடுகிறது.

இங்கே எமது புரிதலுக்கு உட்படும் இரண்டு விடயங்கள்
1. கரிகாலன் – சமர் விவாதப்பண்பு குறித்து
2. மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய கேள்விக்குட்படுத்துவது விமர்சிப்பது பற்றி.

கரிகாலனின் விவாதப்பண்பு விவாதத்தைத்தூண்டுவதாக இல்லை. விவாதம் ஏன்? எளிமையாக புரிந்து கொள்ளக்கூடியவை, சலிப்பையே உண்டுபண்ணும். என்று ஒருவகை அலட்சியப்போக்கை வெளிக்காட்டுகிறார். இது தன் கருத்தை திணிக்கும் அல்லது விவாதத்தை மறுக்கும் போக்காகவே இருக்கிறது. இதைச் சுட்டிக்காட்டும் சமரும் இதே தவறுக்குள் மூழ்கிவிடுகிறது. எப்படி எனில் : விவாதம் நடத்தும் சக்திகள்யார் என்பதை மறந்து மாற்றுக்கருத்துக்களை திரிபுகளாக்கி தனது இறுகிய போக்கை இனம் காட்டுகிறது.

முற்போக்கு சக்திகள் தமக்கிடையில் ஆரோக்கியமான கருத்துப்பரிமாற்றங்களினூடாக ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வந்தடைய வேண்டும் என்று பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே இப்படிக் குறிகிக்கொண்டே போவதை நாம் எப்படிப்பார்ப்பது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதோ கேள்விக்குட்படுத்துவதோ சரியா என்னும் சர்ச்சை மார்க்சியம் என்ற சமூக விஞ்ஞானம் படைக்கப்பட்டதில் இருந்து காலம் காலமாய் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ கேள்விக்குட்படுத்துவதையோ திரிபுவாதம் என்கிறார்கள்.

மார்க்சியம் என்ற சமூகவிஞ்ஞானத்தை ஸ்தூலமான நிலமைகளுக்கு ஏற்ப பிரயோகிப்பதும் பரிசோதனைக்கு வெற்றியளிப்பதினூடாகத்தான் அது சரியானதாக இருக்கமுடியும் என்று எதிர்தரப்பு மார்க்சியர்களும் இன்றுவரை விவாதம் புரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். உண்மை யாதெனில் இற்றவரையான தத்துவங்கள் எல்லாவற்றிலும் புரட்சிகரமானதாகவும் வரலாற்றை மாற்றிப்படைக்கும் வல்லமை கொண்டதாகவும் இருப்பது மார்க்சியமே அதேவேளை மார்க்சியம் புரட்சிகரமானதாக இருப்பதால் அதுவே எல்லாக்காலத்துக்கும் தோன்றும் அனைத்துப்பிரச்சனைகளுக்கும் சர்வரோக நிவாரணி ஆகிவிடும் என்று கருதுவோம் ஆயின் நாம் மார்க்சியத்தை தவறாக புரிந்திருக்கிறோம் என்றுதானே பொருள். வரலாற்றுப் போக்கில் ஸ்தூலமான நிலமைகளில் மார்க்சியம் இன்னும் பல கேள்விகளை தன்னுள்ளே எழுப்பிக்கொண்டுதான் இருக்கிறது.

தேசியப்பிரச்சனை குறித்து இன்று ஆழமான விவாதத்தில் ஈடுபடும்போதுதான் மார்க்சியத்தின் தேசியப்பிரச்சனை குறித்த உள்ளார்ந்தமான உண்மைகளை புரிதலில் இழைக்கப்பட்ட தவறுகளை இன்றுநாம் கற்றுக் கொள்ள முடிகிறது. இன்று நமது கடமை ஸ்தூலமான நிலமைகளுக்கு ஏற்ப சரியான கருத்துக்களைத்தேடி விவாதத்தை ஆரோக்கயமாக நிகழ்த்த வேண்டும். அலட்சியம் இறுகியபோக்கு போன்ற பண்புகளில் இருந்து விடுபடவேண்டும். நாம் ஒன்றைமட்டும் தெளிவாக அறிந்து கொள்வோம். மார்க்சியம் மூலவர்களோடு இறுகிப்போய் இருக்கவில்லை அவர்களின்பின்னால் மறைந்தும் மறைக்கப்பட்ட பலதத்துவ மேதைகளால் வளர்த்தெடுக்கப்பட்டது/ வருகிறது என்ற உண்மையை.

மார்க்சியர்களிடையே தேசியப்பிரச்சனையில் லெனின் ஸ்ராலின் கருத்துக்களே இன்றும் அதிகம் செல்வாக்கு செலுத்துகிறது. ஆயினும் தேசியஇனம் குறித்து ஸ்டாலின் ஒரு வரையறைக்கு வந்தடைய ஆஸ்திரிய மார்க்சியர்களான ஆட்டோபவர், கார்ரென்னர் போன்றவர்களின் கருத்துக்களே காத்திரமான பங்களிப்பை செய்துள்ளது. தேசிய இனப்பிரச்சனைகளில் மொழி, பண்பாடு ஆகியவற்றின் பெறுமதியை வலியுறுத்தியவர்களில் ஆட்டோபவர், ரென்னரின் பங்களிப்பு பிரதானமானது.

ஒரு கூட்டரசில் உள்ள வேறுபட்ட தேசிய இனங்கள் பொதுநில அடிப்படையில் சுதந்திரத்தைக் கோராமல் மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாக்கக்கூடியவகையில் ஒரு சுயாட்சியை கோரலாம் என்றார்கள் பாயர், ரென்னர்.

தேசியப்பிரச்சனைகுறித்த ஆட்டோப்பவரின் 'Die Nationalitäten Frage und die sozial Demokratie ' நூல் மார்க்சியத்தத்துவத்துறையில் மிகவும் பெறுமதிவாய்ந்த படைப்பாக இருந்து வருகிறது என்று பல அறிஞர்கள் இன்று அழுத்திக் குறிப்பிடுகின்றனர்.

தேசியப் பிரச்சனை குறித்து விவாதத்தை நடத்தும் நாம் ஆட்டோபவர் கார்ல்ரென்னர் , அயர்லாந்து விடுதலைப் போராளியும் சோசலிஸ்டுமான ஜேம்ஸ்கன்னெலி போன்றவர்களின் கருத்துக்களை இன்றுதான் நாம் தெரிந்து கொள்கிறோம். மார்க்சியம் என்ற சமூக விஞ்ஞானத்துக்கு வளம் சேர்ப்பதில் அன்றுதொட்டு இன்றுவரை பல அறிஞர்களின் பங்களிப்பு இருந்து வந்திருக்கிறது. ஒரு பயனுடைய விவாதத்தை நிகழ்த்தும் நாம் எழுந்தமானமாக முற்போக்கு, பிற்போக்கு, திரிபு, முத்திரை குத்தாமல் கருத்தின் பலத்தைக்காண்பதே ஆரோக்கியமான அணுகுமுறையாகும்.

இன்று எம்மிடையே நிகழும் விவாதம் முக்கியமாக இரண்டு புள்ளிகளில் குவிகின்றது.

1. தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளை மதிப்பிடுவது.
2. தேசியவிடுதலைப் போராட்டமா/ ஐக்கியப்பட்ட புரட்சியா ?

முதலாவதும் முக்கியமானதும் புலிகள் குறித்த மதிப்பீடு. இது இன்று அவசியமானது. இந்த மதிப்பீட்டு விவாதத்தில் பலர் மயங்கியும் மௌனித்தும் போய்விடக்கூடிய சாத்தியப்பாடுகளும் உண்டு. இருப்பினும் இந்த மதிப்பீட்டில் இருந்துதான் சரியான சக்திகளையும் போராட்டம் முன்னெடுக்கப்படவேண்டிய சரியான திசையையும் நாம் கண்டு கொள்ள வேண்டும்.

புலிகள் குறித்த மதிப்பீட்டில் இன்று வாதப்பிரதிவாதங்கள் நிறையவே நிகழ்கின்றன. புலிகள் தேசிய விடுதலைப்போரில் ஒரு கூறு, தேசிய சக்தி, முதலாளித்துவ தேசிய வாதிகள், குறுங் தேசிய வாதிகள், குழுநலன்கள் மட்டுமே கொண்டவர்கள் என்றெல்லாம் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

புலிகள் தரகு முதலாளித்துவ நலன்களுக்காகப் போராடுவதால் அவர்கள் தேசியசக்தி இல்லை என்கிறது சமர். தூண்டிலில் பிரஜைகளோ புலிகள் முதலாளித்துவத் தேசியவாதிகள் என்கிறது. புலிகளின் போராட்டத்தில் தமிழ் மக்களின் நலனும் பின்னி இருக்கிறது என்று மனிதத்தில் .வாசன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலமோகன் குறிப்பிடுகின்றனர். கரிகாலன் புலிகளிடம் குழுநலன்கள் மட்டுமே இருப்பதாக சொல்கிறார். இதுவரை நிகழ்ந்த விவாதங்களைத் தொகுப்பாக்கிய உயிர்ப்பு புலிகள் தேசிய சக்திதான் ஆயினும் பிற்போக்கு தேசிய சக்திகள் என்ற கருத்தை வந்தடைகிறது. சி.சிவசேகரமும் இந்தக்கருத்தையே முன்வைக்கிறார்.

தேசியசக்திகள் என்றவிவாதத்தில் பொதிந்திருக்கும் தேசியம் என்பதன் அர்த்தம்தான் என்ன ?

தேசமாகவோ தேச அரசாகவோ உருவாகும் முயற்சியிலோ இன்னொன்றின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடும் ஒரு தேசிய இனம் உருவாக்கும் அரசியல் இயக்கம்தான் தேசியம் என விளக்கப்படுகிறது.

மொழி நிலம் பண்பாடு என்ற அடிப்படையிலேதான் தேசியம் உருவாகிறது. ஆயினும் தேசிய உணர்வு மேல் எழுவதற்கு இவை எல்லாமே அடிப்படையாக இருக்கவேண்டும் என்பதுஇல்லை. இவற்றில் ஒன்றே போதுமானது. தென்இந்தியாவில் பெரியார் திராவிடநாடு கோரிக்கையை முன்வைத்ததும் பின்பு தி. மு. க தமிழ் நாடு என்று மொழிஅடிப்படையில் சுருக்கிக் கொண்டதையும் இங்கு நாம் ஒப்பிடலாம். தேசியம் என்கின்ற கருத்தாக்கம் நவீன பிரெஞ்சு தேசத்தின் உருவாக்கத்துடன்தான் பிறந்தது. தேசியம் தேசஅரசு போன்ற கருத்தாக்கங்கள் எல்லாம் விடுதலை சுதந்திரம் என்ற கருத்துக்களைப்போலவே கடந்த 200ஆண்டுகளாக பிரான்ஸ்/ ஆங்கிலேய சமூகங்களில் இருந்து உலகுக்கு பரப்பப்பட்ட கருத்தாக்கங்கள்தான் என்றார் பிரிட்டனின் தகர்வு என்ற தத்துவ நூலை எழுதிய டாம்நய்னர். தேசியம்தான் தேசத்தை உருவாக்கிறதே ஒழிய தேசம் தேசியத்தை உருவாக்குவதில்லை என்று தேசியத்தின் சிறப்பை விளக்கினார் அறிஞர்கெல்னர்.

இந்தியா இலங்கை போன்ற தேசஉருவாக்கங்களில் இருந்து கெல்னரின் கூற்றை நாம் இன்னும் விளங்கிக் கொள்ள முடியும். ஆங்கிலேயரின் ஒற்றையாட்சி பிடிக்குள் வரும்வரை இலங்கை என்ற தேசம் இருக்கவில்லை, இந்தியாவும் அப்படித்தான்.

நிர்வாக பொருளாதார சந்தைத் தேவைகளுக்காக பல்வேறு தேசிய இனங்கள் ஒற்றையாட்சியின்கீழ் வாழநிர்ப்பந்திக்கப்பட்டன. சுதந்திரம் பெறும் போராட்டத்தில் சேர். பொன். இராமநாதன் இலங்கை தேசிய பிரதிநிதியாய் இங்கிலாந்து செல்கிறார். இங்கே ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுதலை பெறும் முனைப்பில் இலங்கை என்ற தேசிய உணர்வு உயர்ந்து நிற்கிறது. சுதந்திரத்தின் பிற்பாடு சிங்கள பேரினவாத அரசு சிறுபான்மை தமிழர்கள் மீது திணித்த ஒடுக்குமுறைகள் உறங்கிக்கிடந்த தமிழ்த்தேசியத்தை தட்டி எழுப்புகிறது. தேசியம் என்பது. உறக்கநிலையில் இருக்கும் பழைய ஆற்றல் விழித்துக் கொள்வதல்ல ஆனால் அது அப்படித்தான் நிகழ்கின்றன என்ற கெல்னரின்கூற்றின் உண்மையை இலங்கை தமிழ்த்தேசியத்தின் விழிப்பினூடாக உணரமுடிகிறது. ஆங்கிலேய ஆட்சிக்குள் உறங்கிக்கிடந்த தமிழ்த்தேசியம் பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியினால் விழித்துக் கொண்டதும் விடுதலை பெறும் நோக்கில் போராட்டத்தில் குதித்ததும் இலங்கை தமிழ்த் தேசியத்தின் வரலாறு.

இந்த வகையில் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கான போரில் ஈடுபடும் சக்திகள் அனைத்துமே தேசிய சக்திகள்தான். ஈழமோ தமிழ்ஈழமோ தமிழ்த் தேசியத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்கான அரசியல் வரையறையாகும்.

மார்க்சியத்தைப் பொறுத்தவரை தேசியம் தேசிய உணர்வு பிற்போக்கானதே என்ற பார்வையே மேலோங்கி இருந்தது. காலனி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் மட்டும் முற்போக்கு பாத்திரத்தை ஆற்றமுடியும் என்றும் கருதியது. காலனி ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமற்ற இன்றைய இலங்கை போன்ற தேசங்களில் நிகழும் போராட்டங்கள் பிற்போக்கானதாகவே கருதப்படுகிறது. இதுதான் மரபார்ந்த மார்க்சியர்களின் பார்வையாகவும் இருக்கிறது. இதையே தேசிய நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதில் மார்க்சியம் மாபெரும் தோல்வியை தழுவிவிட்டதாக இன்றைய மார்க்சிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மார்க்சியத்தைப் பொறுத்தவரையில் தேசிய நிகழ்வுப்போக்கைப் புரிந்து கொள்வதிலும் கருத்துருப்படுத்துவதிலும் அது தோல்வி அடைந்திருப்பது விரிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாறாத வடிவிலான சூத்திரங்களை திரும்பத்திரும்பக் கூறுவதும் பிரச்சனை குறித்து போதியஅளவு கருத்துருவாதியான தத்துவார்த்த புரிந்துணர்வை வழங்கும் சாத்தியமின்மையும்தான் தேசிய நிகழ்வுப்போக்கைப் புரிந்துகொள்வதில் தோல்வியை தழுவியதற்கான காரணம் என்கிறார் எப்ரகிம் நிம்னி. அதேநேரம் சமுகவியல் தத்துவம் என்றாலும் தேசிய நிகழ்வுப்போக்கை புரிந்து கொண்டதா என்றால் அதற்கான பதிலும் மாபெரும் தோல்வி என்பதாகவே இருக்கிறது. என்றும் எப்ரகிம் நிம்னி குறிப்பிடுகிறார். சோவியத்யூனியனின் வீழ்ச்சி கிழக்குஐரோப்பிய நாடுகளின் உடைவுகள் தேசிய நிகழ்வுப்போக்கு குறித்த ஒரு சரியான புரிதலுக்கான தூண்டுதலை இன்று ஏற்படுத்தி இருக்கிறது.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் அடித்தளத்தில் கட்டப்பட்டிருக்கும் இலங்கை அரசின் ஆட்சியின் கீழ் தமிழ் மக்களின் தேசியப்போராட்டம் இன்று வாழ்வுப்போராட்டமாகிவிட்டது. இந்த வகையில் தமிழ் மக்களின் தேசியப்போராட்டத்தை பல்வேறுபட்ட சக்திகள் முன்னெடுத்தன. இந்தப் போராட்டத்தில் தோன்றிய பல்வேறு இயக்கங்களில் புலிகளும் ஒன்று. ஆகவே உயிர்ப்பு குறிப்பிடுவது போன்று புலிகளும் தேசியவிடுதலைப்போரில் ஒரு கூறுதான். ஆனாலும் இன்றைய போராட்ட சூழலில் புலிகள் ஏனைய

இயக்கங்களை இயங்கவிடவில்லை தடைசெய்து அழிக்கிறார்கள். 'போராடினால் புலியாகப் போராடு' என்ற தத்துவத்தில் தனி ஒரு சக்தியாக தேசிய விடுதலைப் போராட்டத்தை கைப்பற்றி இருக்கிறார்கள்.ஒடுக்கப்படும் தேசிய இனமாக இருந்துகொண்டே இன்னொரு தேசிய இனத்தை - முஸ்லீம்மக்களை - சொந்த மண்ணை விட்டு விரட்டி அடித்ததோடு தொடர்ந்து தூரத்திநிகழ்த்தும் கொலைகள் ஊடாக தமது பாசிசப் போக்கை வெளிப்படுத்துகிறார்கள்.

தன் செந்தமக்களுக்கே ஜனநாயக மறுப்பு மாற்றுக்கருத்துள்ளவர்களை / இயக்கங்களை அழிப்பு பிறிதோர் தேசியஇனத்தை அவர்களது சொந்த மண்ணைவிட்டு வெளியேற்றியமை தன் எல்லைப்பரப்பைக்கடந்தும் அந்நியமண்ணில் அப்பாவிமக்களை கொன்றொழிப்பது ஆகிய அனைத்து கொடூர நடவடிக்கைகளையும் செய்யும் ஒருசக்தியையே இங்கு பாசிசம் என்று வரையறுக்கப்படுகிறது.

முற்போக்கு சக்திகள் புலிகள் தேசியசக்தியா இல்லையா என்று விவாதம் மட்டும் நிகழ்த்திக் கொண்டிருக்க புலிகளோ தங்கள் பாசிசப்போக்கை தமிழ்மக்கள் அங்கீகரிப்பதற்கான ஒரு கருத்துப் பரப்பை உருவாக்கிக் கொண்டார்கள். இது முஸ்லீம்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என்று தமிழ்தேசிய வெறியாக இன்று வெளிப்படுகிறது. இப்போது நாம் புலிகளை மதிப்பிடுவதானால் அவர்கள் தேசிய விடுதலைப் போரில் பாசிசத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு சக்தி அவ்வளவுதான்.

இருந்தும் இத்தகைய பாசிச போக்குகளைக்கண்டும் புலிகளை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்றால் அவர்கள் இன்னமும் தமிழ்த் தேசியத்தின் நலன்களுக்காகவும் போராடிக்கொண்டிருக்கினார்கள் என்ற ஒரேகாரணம்தான். அவர்களது அரசியல் ஊசலாட்டப்போக்கு இந்த நலன்களை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதற்கான உறுதிஎதையும் வழங்குவதாகஇல்லை. இங்கு இனி நாம் நிகழ்த்த வேண்டிய விவாதம் புலிகள் தேசியசக்தியா இல்லையா என்பதல்ல மாறாக புலிகளின் போரினால் கிடைக்கப்போகும் நன்மை என்ன என்பதே.

தமிழ்மக்களைப்பொறுத்தவரை சுதந்திரமான வாழ்வைத்தான் விரும்புகிறார்கள். அந்த சுதந்திரம் தேசியப்போராட்டத்தினூடாகத்தான் கிடைக்கமுடியும். இதைத்தவிர நம்பிக்கை கொள்ளும் வகையில் எந்த வழிமுறையும் தெரியவில்லை. போராட்டத்தைக் கைப்பற்றியுள்ள சக்தியோ பாசிசத்தை வெளிப்படுத்துகிறது. அப்படி எனில் தமிழ்மக்களின் எதிர்காலம்தான் என்ன ?

இலங்கை அரசு தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்காதவரை யுத்த நிலமை நீடிப்பதையோ புலிகளின் இருப்பையோ யாராலும் அசைத்துவிட முடியாது என்று புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்படாதவரை புலிகளிடம் யுத்தத்தை நிறுத்துமாறு கோருவதும் த. வி. கூ மற்றும் ஜனநாயக வழிக்கு வந்துள்ள அரசியல் கட்சிகளின் வாயைக் கட்டிப்போடுவதும் ஒன்றுதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டுமென்று சரிநிகரில் பா. கந்தசாமி எழுதுவது கவனிக்கப்பாலது.

புலிகள் எத்தகைய பாசிச போக்கைவெளிப்படுத்தினாலும் அவர்கள் தேசியத்தின் பக்கமாக இருப்பதாகவே இவர் சொல்கிறார். இங்குதான் தேசியம் பற்றிய சரியான மதிப்பீடும் தேசியவிடுதலைப் போராட்டம் குறித்த ஆழமானபார்வையும் அவசியமாகிறது. முற்போக்கு சக்திகள் ஐக்கிய இலங்கை வர்க்கப்பார்வை போன்றவற்றில் மூழ்கிக் கொண்டிருந்தபோதுபுலிகள் தமிழ் மக்களின் சனரஞ்சக ஜனநாயகக்கருத்துப்பரப்பை கைப்பற்றிவிட்டார்கள். இந்தக் கருத்துப்பரப்பை ஆயுதத்தால்மட்டும் பெறவில்லை. ஆழமனதில் உறைந்துகிடந்த பண்பாடு புராணங்கள் கலாச்சாரங்களை உயர்த்திபிடிப்பதனூடாகவுமே இந்தக்கருத்துப்பரப்பைப் கைப்பற்றிக் கொண்டார்கள். சோழர்களும், சங்கிலியனும் எவ்வளவு கொடூர மன்னர்களாக இருந்தாலும் தமிழ்த்தேசியத்தின் குறியீடாகும்போது புலிகளின்தலைவர் பிரபாகரனும் இதேகுறியீட்டில் அடக்கப்படுவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

மொத்தத்தில் புலிகள் அப்பட்டமான பிற்போக்கான தமிழ்த்தேசியத்தின் பிரதிநிதிகளாய் பாசிசத்தை நடைமுறையில் கொண்டுள்ள ஒரு சக்தி புலிகள் அமைப்பில் கீழ்மட்டத்தில் உள்ளவர்களை சயனைட் காவிய ஊழியர்களாகவோ புலிகள் அமைப்புக்கு சேவகம் செய்பவர்களாக மட்டுமோ குறுக்கிவிடமுடியாது. இவர்கள் தமிழ்த்தேசியத்தின் விடுதலையை புலிகள் அமைப்பினூடாகத்தான் வென்றெடுக்கமுடியும் என்று நம்பியுள்ள தேசபக்தர்களும்கூட.

* * *

## இதுவல்லவா மனிதாபிமானம் !

*அண்மையில் சோமாலியாவின் நெருக்கடிகளைப் பயன்படுத்தி 'நிவாரணப் பொருட்கள்' என்று நயவஞ்சகமாக ஏகாதிபத்தியங்கள் கழிவுகளைக் கொண்டுவந்து சோமாலியா கடற்கரையோரமாக கடலில் புதைத்திருக்கின்றன. இக் கழிவைப் புதைத்தது அமெரிக்காவா? இத்தாலியா என்று விவாதம் வேறு நடத்திக்கொண்டிருக்கிறார்கள் ஐ.நா அதிகாரிகள்!*

www.tamilarangam.net

# பொலன்னறுவைக் கொலைகளும் முஸ்லீம் காங்கிரசும்

அபூரணன் (இலங்கை)

கடந்த அக்டோபர் 15ம் திகதி புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பொலன்னறுவைக் கொலைகள் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியை ஒரு சிக்கலான நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இக் கொலைகள் தொடர்பில் 'முஸ்லீம்' காங்கிரஸ் உறுதியான போராட்டம் ஒன்றையும் எடுக்காவிட்டால் முஸ்லீம் காங்கிரசால் தொடர்ந்து அரசியலை நடத்த முடியுமா? என்பதுவும் கேள்விக் குறியாகியுள்ளது. வழக்கம்போல 'பாதுகாப்பை ஏற்படுத்துங்கள், இராணுவத்துக்குள் முஸ்லீம் பிரிவை ஏற்படுத்துங்கள்' என்ற கோசத்துடன் மட்டும் நின்றுவிடாமல் ஒரு படி முன்னேறி போராட்டத்தை நடத்துவதற்கும் முஸ்லீம் காங்கிரஸ் முன்வந்துள்ளது.

இந்த முன்வருகையின் வெளிப்பாடாகவே கரிநாள் போராட்டத்தை நவம்பரில் நடாத்தியது. ஆரம்பத்தில் அப் போராட்டம் அரசுக்கும் புலிகளுக்கும் எதிரானது எனக் கூறப்பட்டபோதும் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான போராட்டமாகவே மாறியது. அன்றைய தினம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் அதையே காட்டின. **இலங்கை இராணுவத்துள் முஸ்லீம் பிரிவு ஒன்றை அமைத்தல் வேண்டும்** என்பதே போராட்டத்தின் பிரதான கோரிக்கையாகவும் அமைந்தது.

இப் போராட்டக் கோரிக்கையினூடாக முஸ்லிம் காங்கிரஸ் பழைய தவறுகளையே தொடர்ந்தும் விட முயற்சிக்கிறது. முஸ்லிம்களின் பாதுகாப்பை கட்டி எழுப்புவதற்கும் முஸ்லிம் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கும் சொந்தப்பலத்தில் தங்கியிருக்க முயற்சிக்காமல் அரசிலேயே தங்கி நிற்க முயற்சிக்கின்றது. அரச படைக்குள் முஸ்லிம் பிரிவு ஒன்றை உருவாக்கிவிட்டால் முஸ்லிம்களை பாதுகாத்துவிடலாம் என நினைக்கின்றது. இந் நினைவுகள் மிக மிகத் தவறானதாக அமைவதோடு முஸ்லிம் மக்களுக்கு ஆபத்தாகவும் மாறிவிடக் கூடியது.

முஸ்லிம் மக்கள் தொடர்பில் இன்று ஆட்சியில் இருக்கும் இனவாத அரசுக்கு எவ்வித கரிசனையும் கிடையாது. ஒரு சிறுபான்மை இனத்தை ஒடுக்குவதற்கு இன்னோர் சிறுபான்மை இனத்தைப் பயன்படுத்துதல் எனும் தந்திரத்தின் அடிப்படையிலேயே அது முஸ்லிம் மக்களின்மீது கரிசனையுள்ளதாக நடித்துக் கொள்கின்றது. முஸ்லிம் காங்கிரசின் தனியான படைப்பிரிவுக் கோரிக்கைக்கு அரசு ஒருபோதும் இணங்கப்போவதில்லை. அப்படி ஒரு படையை உருவாக்கினால் முஸ்லிம் மக்களை அரசு ஒடுக்கும்போது அப் படைப்பிரிவு அரசுக்கு எதிராகத் திரும்பிவிடக்கூடிய அபாயமும் உண்டு. முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில், புலிகளின் அச்சுறுத்தலுக்குப் புறம்பாக அரசினால் -பிரதானமாக குடியேற்றம் தொடர்பில்- நெருக்கடிக்குள்ளாக வேண்டிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

இதைவிட முஸ்லிம் காங்கிரசினர் தமது சகல இருப்பிற்கும் அரசில் தங்கியிருந்துகொண்டு அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக எவ்வாறு போராடப் போகின்றார்கள் ? முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை புலிகளின் அச்சுறுத்தல் அகலகின்றபோது, முழுக்க முழுக்க அரசையே எதிர்த்துப் போரிடவேண்டிய நிலை வரும். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகின்ற ஏனைய ஒடுக்குமுறைகள் அனைத்தும் அரசிலிருந்தே தோற்றுவிக்கப்படுகின்றன. அரசுக்கு எதிராகப் போராடுகின்ற நிலை வரும்போது, அரசுக்கு ஆதரவளிக்கும்படி திருப்பிவிட்ட மக்களை திரும்ப அரசுக்கு எதிராக திருப்பி விடுவது கடினமானதாகும். எனவே முஸ்லிம் காங்கிரஸிற்கு இன்றுள்ள பிரதான கடமை அரசில் தங்கியிருப்பதற்கு மாறாக முஸ்லிம் மக்களுக்கான ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டியெழுப்புவதேயாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் விடுகின்ற தவறுகளில் இன்னொன்று தமிழ் மக்களின் பிரச்சனையில் அதன் அணுகுமுறையாகும். வடக்கு-கிழக்கு இணைப்பை அது முழுமையாக அங்கீகரிக்க மறுக்கின்றது. இதன்மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பினைச் சம்பாதிக்க முனைகின்றது. வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது தமிழத் தேசியத்தின் உயிர். அது இல்லாமல் தமிழ்த் தேசியமென்பது இருக்க முடியாது. இத் தேசியத்தை தமிழ் மக்களை புலிகளின்பால் தள்ளிவிடுகின்ற கைங்காரியத்தை முஸ்லிம் காங்கிரஸ் செய்கின்றது. வடக்கு-கிழக்கு இணைப்பை அங்கீகரித்து அதற்குள் முஸ்லிம்களின் சுயாட்சியை வலியுறுத்துகின்றபோது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை அங்கீகரிப்பார்கள், அதற்காக குரல் கொடுக்கவும் முன்வருவார்கள். இதைவிடுத்து தொடர்ச்சியாக முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்தால் நீண்ட காலத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வாழுகின்ற தமிழர்களும், தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வாழுகின்ற முஸ்லிம்களும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும். இந்நிலை நிரந்தரமாக இரு சமூகங்களும் எதிராளியாகின்ற நிலைமையை தோற்றுவிக்கும். எனவே முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில் தங்கியிராமல் முஸ்லிம்களுக்கென ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டி எழுப்புவதோடு, தமிழ் மக்களையும் வென்றெடுப்பதற்கு முயற்சித்தால் மட்டுமே அது ஒரு தேசிய இயக்கமாக வளர்ச்சிபெற முடியும். இல்லையேல் தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழ் மக்கள் தூக்கி வீசியது போல முஸ்லீம் காங்கிரசை முஸ்லிம் மக்கள் தூக்கி வீசும் நாள் வெகு தொலைவில் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**சிறுகதை :**

# ஒரு சுதந்திரம்

" கூடைக்கா (அ) ப்பா போறே? " என்று கதிரேசன் கேட்கிறான்.

"ஆமா! ஏன்? .... ஓகோ! நான் மறக்கலே .... ஞாபகம் இருக்கு. 'நூத்தியெம்பது பக்கத்துலெ கணக்குக் கொப்பி ஒண்ணு வேணு (ம்அ) ப்பா!' ண்ணு நீ போன கெழமெ சொன்னியே .... அதுதானே? மறக்காமே நான் இன்னைக்கி வாங்கிட்டு வாரேன்" என்கிறான் அவன் அப்பன் ஆறுமுகம்.

"அது இல்லே (அ) ப்பா!"

" அப்ப எது? "

"பெப்புரவரி மாசம் நாலாந்தேதி, ஒரு சொதந்திர தினம் வருதாம்!"

"அது வார நாளைக்கி வரட்டும், போற நாளைக்கிப் போயித் தொலையட்டும். நீ ஏன்டா (அ) ய்யா? கவலெப்புடுறே!"

"நல்ல காலம் .... காருலையா? பஸ்ஸிலையா? லொரீலையா? கப்பல்லையா? கோச்சிலையா? எலிகொப்புட்டர்லையா? ஏரோப்புலேனுலையா? அது வருமுண்ணு கேக்காமே உட்டுப்புட்டியே!"



"இந்தக் காலத்துப் பயலுககிட்டே இப்போ, பேசித் தப்பவே ஏலாது! ஒண்ணையும் ஒழுங்கா உருப்புடியாச் செய்ய முடியாட்டியும் .... நன்னாக் கதைப்பானுக! சரி... சொல்லு!"

"பெப்புரவரி நாலாந்தேதி வார சொதந்திர தெனத்துக்கு... மொதலாந் தேதீலே இருந்து அஞ்சாந் தேதி வரைக்கும் ... ஒவ்வொரு வூட்டுக் கூரைக்கு மேலேயும் ..."

" கறுப்புக் கொடி போடச் சொன்னானுகளா? "

" ஐயோ! இல்லே, சிங்கக் கொடி ஒண்ணே எடுத்து .... ஒரு கம்புலே மாட்டி .... கட்டித் தொங்கவுட்டு .... முடியுமுண்ணா அதைச் சுத்தீ .... "

" சாம்புராணிப் பொகை புடிக்கச் சொன்னானுகளா? "

" இல்லே. விடியவிடிய வௌக்குப் புடிச்சிக்கிட்டு இருக்கோனுமுண்ணு .... எங்க பெரிய சேரு... பாடசாலைக் காலைக் கூட்டத்துலே.... பிரசங்கம் பண்ணுனாரு (அ) ப்பா! "

"யாருக்கு சொதந்தரம் கெடைச்சு இருக்கூண்ணும் .... சொன்னாராடா? ஒங்க பெரிய சேரு!" – ஆறுமுகம்.

" குப்பிலாம்பு எரிச்சி பொகை வெளிச்சம் போடவே .... லாம்பெண்ணெ வாங்கக்கூட .... இங்கே வக்கில்லாமெக் கெடக்குது! இந்த லெச்சணத்துலே .... போயி கொடியெக் கட்டி தூக்கிப் புடிச்சி, அதுக்கு விடியவிடிய வௌக்குப் புடிங்களே? அதெல்லாம் நமக்கு வேண்டாண்டாய்யா! "என்றே, கதிரேசனின் தாய் அகிலாண்டம் முகஞ் சுளிக்கிறாள்.

**கண்டி எம். ராமச்சந்திரன்**

www.tamilarangam.net

"அவன் எனக்கிட்டே தானே கதைச்சுக்கிட்டு இருக்கான்... நீ யேன்டீ? அவன்மேலே பாயுறே!. அவுக இசுக்கூலு பெரிய சேரு சொன்னதைத் தானே... அவன் வந்து, நம்மகிட்டே... கிளிப்புள்ளே மாதிரிச் சொல்லுறான்! பாவம்! அவனுக்கு இன்னம் வெவரந் தெரியலே. சொதந்தரம் கெடைச்சவுக மட்டுந்தான் அப்புடிச் செய்யோணுமுண்ணு அவரு சொல்லி யிருப்பாரு! இவனுக்கு அது வெளங்காமே..."

"நானூற்றைம்பது வருடங்களாக – புத்தபெருமானின் புனித பாதம்... ஓரிரு முறையல்ல... மூன்று முறை பட்டதாகச் சொல்லப்படும் இந்த தர்மதீபம் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஐரோப்பியர் ஆகியோருக்கே தலா நூற்றி ஐம்பது வருடங்களாக அடிமைப்பட்டுக் கிடந்திருந்ததன் பின்னர், 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நாலாம் திகதியேதான் சுதந்திரம் அடைந்தது! என்று தனது சமூகக்கல்வி ஆசிரியர் தனக்குச் சொல்லிக் கொடுத்தார் என்றும், கதிரேசன் தனது தாய்தந்தையரிடம் விவரம் சொன்னதும் அவர்கள் வெகுண்டெழுந்தனர்.

"வெள்ளைக்காரனுக ஆண்ட காலத்துலே யாச்சும் வருஷாவருஷம்... பொங்கலுக்குப் பொங்கல்... நம்ம லயத்துக் காம்புரா செவத்து ஓட்டெ ஒடைசலே, மண்ணெவச்சி அடைச்சீ... சுண்ணாம்பைக் கரைச்சி ஊத்தி வெள்ளெ அடிச்சானுக!...."

"ஆனா...1972க்குப் பொறகு அதுவும் இல்லாமெப் போச்சி! எல்லா லயத்துக் கூரைத் தகரமும் சல்லடை ஓட்டை! சொவரு எல்லாம் கண்ணங் கறேருண்ணு கரிச்சட்டிதான்" என்றே விளக்கம் சொல்கிறாள் அகிலாண்டம்.

"ஆமா! சொன்னாப்புலே வெள்ளைக்காரத் தொரைமாருக இருந்த காலத்துலே எங்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்சச் சொதந்தரமும், 1949 பிரசா உரிமைச் சட்டத்தைக் கொண்ணாந்து தட்டிப் பறிச்சுப்புட்டானுக... பாவிக!" என்றே ஆறுமுகம், அகிலாண்டதை ஆதரிக்கிறான்.

"அப்பவே நானு... தலெமேலே அடிச்சிக் கிட்டு... படிச்சிப் படிச்சிச் சொன்னேனே... இனிமே இங்கே இப்புடித்தான் நடக்குமுண்ணு! பொம்பளெ பேச்சுத்தானேண்ணு நீங்க அப்போ காதுலே போட்டுக்கலே!..."

" 1977, 1983 வன்செயல்லே, அடி ஒதே அவமானத்தே வாங்கிக் கட்டிக்கிட்டத்தோடே... உள்ள ஒரு அரை மஞ்சாடி பொட்டுப்பொடுசு தங்க நகை தாலியையும் பறிகுடுத்துப்புட்டு... மத்தவுக, வவுனியா கிளிநொச்சீண்ணு அகதிகளாப் போயித் தொலெஞ்ச மாதிரி... நாமலும் கட்டுன துணியோடே போயித் தொலெஞ்சி இருந்தா? " – அகிலாண்டம்.

" ஆமாடி! நாம அங்கே போயிருந்தா... பஞ்சி மெத்தைமேலே நம்மலே காலுமேலே காலேநீட்டிப் படுக்க வச்சிப்புட்டு... பாயாசம் காச்சி, பப்படம் பொரிச்சி, உழுந்து வடை சுட்டு, தயிரெப் புளிக்க வச்சீ, 'சுடச்சுட இப்பதான் சோறு வடிச்சி இறக்கீட்டம்... எழுந்திருச்சி வாங்க... சாப்புட' ண்ணு விருந்து படைப்பாக? சும்மா கெடடீ அங்கிட்டு! "...

"போன பயசிறுக்கிகளுந்தான், போன மாசம் நம்ம மாடசாமி கங்காணியாருக்குக் கடதாசி போட்டிருக்குதுக. 'கங்காணியாரே! கங்காணியாரே! நாங்க தெரியாத்தனமா வந்து இங்கே மாட்டிக்கிட்டோமு' ண்ணு...

" நாம இங்கே வெள்ளைக் காரனுகளுக்கும், அப்பறம் இவுனுகளுக்கும்... நூத்தி எழுவது வருஷமா ஒழெச்சிக் குடுத்துப்புட்டு ஒண்ணுமில்லாமெப் போனமாதிரி... அங்கேயும் போயி அவனுகளுக்கும்...? நாயி எங்கே போனாலும் தண்ணியே... நக்கித் தாண்டீ குடிக்கணும்! " – ஆறுமுகத்தின் வேதாந்தம்.

'அந்தப் பகுதிகளிலேதான் நல்ல படிப்பு' என்றே, வட்டிக்கடை முதலாளி வையாபுரிப் பிள்ளை சொன்னதாக,



தனது தாய்க்கு அனுசரணையாகக் கதிரேசன் சொல்லுகிறான்.

'அது பாடசாலையில் அல்ல... டியூஷன் கடைகளிலே' எனும் தோரணையிலே "அடேய்! காசு மட்டும் கைநெரம்ப இருந்தா அங்கே மட்டும் இல்லேடா... எங்கேயும் படிப்பு நல்லாத்தான் இருக்கும்." என்றே யதார்த்தம் பேசுகிறான் ஆறுமுகம்.

" அப்பா! எங்க 'மெற்சு' சேரு அந்தீலையும், சனி ஞாயிறுலையும், டியூசன் குடுக்குறாரு... மாசம் இருநூறு ரூபா பீசு! நானும் போகட்டா? "

" அடே! பொறுக்கிப்பய மகனே! அதெல்லாம் நமக்கு ஏணி வச்சாலும் எட்டுமாடா? முடிஞ்சமுட்டு கஷ்டப்பட்டு படிச்சி

www.tamilarangam.net

'மெற்சுலே' பாசு பண்ணப் பாரு! அப்புடியும் அது ஆகாட்டீ... அதே வுட்டுத் தள்ளு, ஏம் மசுரு! நம்ம தோட்டக் காட்டுப் பயலுகளுக்குண்ணே, ஆண்டவன் எழுதிவச்ச பொடவைக்கடை, செலவு கடை, நகைக்கடை, வட்டிக்கடை, சைவ ஒட்டல்லே... ஒனக்கும் ஒரு எடுபுடி வேலை கெடைக்காமயா பூடும்? " – ஆறுமுகம்.

" நாமதான் நாலெழுத்துப் படிச்சித் தொலைக்காமே நாயிபடாத பாடு படுகுறம்! நம்ம புள்ளெகுட்டிக நாச்சும் கொஞ்சம் நல்லாப் படிச்சி, நாலுபேருக்கு முன்னாலே வரட்டுமுண்ணு பாத்தா... நாசமாப் போனவனுக 'மெற்சுலே' அள்ளி வைக்குறானுகளே! அடியே மாரியாத்தா! நீ தான்டி ஆயா.. இவனுகளுக்கு கூலி குடுக்கோனும்... ஓம்மேலேயே பாரத்தைப் போட்டுட்டேன்! " என்றே அகிலாண்டம் ஆவேசமடைகிறாள்.

" கொடியும் வாங்க வேணாம்.... ஒரு மசுரும் வாங்க வேணாம்.... " என்றே ஒரு கட்டளையிட்டுவிட்டு.....

" அள்ளிப் போட்டான் கடைமுதவாளி – நம்ம தலவரு மாருக ஓட்டுக்கேக்க வாரப்போ மட்டும் மாதிரி – நல்லாவே பல்லெ இளிச்சிஇளிச்சிப் பேசுவான்! அதுலே மயங்கிப் போயி... அவென் சொன்ன வெலைக்கி சாமான் வாங்காமே – நிராசெக் கவனமாப் பாத்துக்கிட்டே இருக்காட்டி, அதுலேயும் ரெண்டுமூணு அவனுசே வாய்க்கரிசி போட்டுக்குவான்! இந்த லெச்சணத்துலே, கடை நெரய சொவத்தேச் சுத்தி பத்துப் பதினைஞ்சி சாமி படம், மாலே, கலர் பல்ப்பு வெளிச்சம். நெத்தி நெறைய விவுதி பூச்சு, நெத்திப் பொட்டுலே அம்பது சத 'சைசுலே' ஒரு சந்தனப் பொட்டு, அதுக்கு உள்ளாரே இருவத்தி அஞ்சிசத 'சைசுலே' ஒரு குங்குமப் பொட்டு. கடை பேரும் சொன்னாப்புலே ஸ்ரீ கணபதி ஸ்டோர்ஸ் " .....

" காலு கடுத்தாலும் பரவாயில்லே.... ரவைக்கிப் படுக்குறத்துக்கு முன்னாடி, நானே எங் கையாலே கருப்பன்தைலத்தே காலுரெண்டுலேயும் நல்லாப் பூசிச்தடவி வழிக்கிறேன்... நாலு கடைகளிலே ஏறி எறங்கி, எங்கனே... வெலை கொறைய இருக்கோ, அங்கனே... ராவுச் சாப்பாட்டுக்கு ஆக்க அரிசிப் பருப்பே ஓடிப்போயி வாங்கிக்கிட்டு .... இருட்ட மிந்தி ஓடியாந்துருங்க " என்று கூறிய அகிலாண்டம் அவன் கையிலே கொஞ்சக் காசையும் ஒரு குட்டிச் சாக்கையும் கொடுத்து... "தண்ணிகிண்ணியெப் போட்டுப்புட்டு, இங்கே வந்துநின்னு தடுமாறுனீக... அப்பறம் நானு நல்லவளா இருக்கமாட்டேன் " என்று வேறு எச்சரிக்கிறாள்.

" நம்ம மகன் கதிரேசன் சின்னப் பயந்தான். அப்புடி யிருந்தாலும், அவன் சொல்லுறதுலேயும் நாயம் இருக்கு புள்ளே! நீயும் கொஞ்சம் ரோசனை பண்ணிப்பாரு...... "

" சீனாப்புள்ளிக்காரன் எவனாச்சும் கொடி போடாமே வுட்டுட்டான்னாலும் பரவாயில்லே...... ஒரு பயலும் அதைப்பத்திப் பெருசாப் பேசமாட்டான்.... "

" எவனாச்சும் ஒரு தமுழுப் பயலோ... துலுக்கப் பயலோ தவறுதலானாச்சும், கொடிபோடாமே வுட்டானோ... மாட்டிக்கிட்டான்.... "

" பாத்தியா! பாத்தியா! இந்த 'தெமழு' 'தம்பிலா' செஞ்ச வேலையே! நாட்டுப் பற்று இல்லாத நாயிப் பயலுக! இவுனுகளே இங்கே வைக்கப்புடாது... இந்தியாவுக்கும், பாக்கிஸ்தானுக்கும் ஒதெச்சி வெரட்டணுமுண்ணு... ஊரு ஒலகத்துக் கெல்லாம் கேக்குற மாதிரி – செத்த வூடுகல்லே, நம்ம தோட்டத்து அம்மாயி அப்பாயி மாருக மாரடிச்சி, அழுது கண்ணீர் வடிச்சி அப்பறம் தொடைச்சீ, மூக்குச் சளியேச் சீறிச் சிந்தீ, முந்தானியிலே வெரலே தொடைக்கிற மாதிரி– கத்திப் பேசி ஒப்பாரி வைப்பானுக! "

" 1914, 1958, 1977, 1983 கலே நெனைச்சா, இன்னம் பயமாத்தான் புள்ளே இருக்கு... "

" செலவேடே செலவா ஒரு சின்னத்துண்டு சிங்கங் கொடியே... போமண்டுலே போட்டுத்தான் 'லபாய் லபாய்' ண்ணு வெலைகூறி விக்கிறானுகளே... ஒண்ணே வாங்கிப்புடுவம்! " என்கிறான் ஆறுமுகம்.

" ஓமா! காணி... வீடு... கம்மொதவ... சனசவி... எல்லாம் எங்களுக்கும்தானே இங்கே ஆக்கிப் படைக்குறாக? " என்றே ஆத்திரப்படுகிறாள் அகிலாண்டம்.

" அப்பா! அப்பா! அப்பக் கொடி வாங்காதே! "

" ஏன்டா! நீயும் ஓங் ஜோயாவுக்கு 'சப்போட்டு' பண்ணுறியா?... இல்லாட்டி, கொடியே வாங்கி, ஒரு கம்புலே, மாட்டி, கூரையிலே சொறுகிவச்சீ, ராவுபகலா காவல்காக்காட்டி..... எவனாச்சும் உருவிக்கிட்டு பூடுவான்ண்ணு பயமா இருக்காடா? "

" தினகரன் பேப்பரோடே சேத்து சின்ன ஒரு சிங்கக் கொடியே எலவுசமாக குடுக்குறாகளாம்... நாலு ரூவா குடுத்து ஒரு பேப்பர் வாங்குப்பா! நான் பேப்பர் வாசிச்சாப்புலே இருக்கும்... அடி ஒதைக்குப் பயந்து, வேண்டா வெறுப்போட நீ கொடிபுடிச் சாப்புலேயும் இருக்கும்! "


" பாத்தியாடீ! நம்ம பயலுக்கு இருக்கிற மூளையே பரவாயில்லே, இவன் புத்திசாலி... பொழைச்சுக்கினுவான்! ஒரே கல்லுலே ரெண்டு மாங்கா! "

" இவுனுக எல்லாம் தொண்டமான் பயவுட்டு ஆளுக... அதுனாலேதான் இவுனுக கொடிபுடிச்சி அரசாங்கத்துக்குச் 'சப்போட்டா' பந்தம் புடிக்கிறானுக, தோட்டக்காட்டுத் தமுழுப் பயலுகண்ணா... மத்தப்பக்கம் திரும்பி, எதிர்கச்சிக் காரனுக கிண்டல் பண்ணுனா என்னா பண்ணுவீக? " என்ற ஒரு இடைச் செறுகலோடு.....

" சரி சரி! நேரமாச்சி! ஒங்க கதையெ வுட்டுப்புட்டு, நடையெக் கட்டுங்க! இந்தாங்க... லாம்பெண்ணெ பைப்புப் பந்தம்! இப்பவே இருட்டிப் போச்சீ! "

என்றே அவசரப்படுத்துகிறாள் அகிலாண்டம்.

www.tamilarangam.net



# காணாமல்போன கண்கள்

இந்த ஆண்டு இலங்கையரசு இலங்கையர்களின் 32ஆயிரம் கண்களை வெளிநாடுகளுக்கு தானம் செய்திருக்கிறது.. இலங்கையரின் விழிகளால் உலகைப் பார்க்கும் பேறுபெற்ற வெளிநாட்டவர்ககளையிட்டு நாம் பெருமைகொள்ள வேண்டும் என்று இலங்கைப் பத்திரிகைகள் எழதின. உலகின் பார்வை அற்றோருக்கு பார்வை வழங்கும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்கின்ற இலங்கையரசின் பரந்து விரிந்த பார்வை நோக்கும் மனிதநேயத்தை என்னவென்று சொல்வது !

இத்தனை ஆயிரம் கண்களும் எவ்வாறு? எங்கு? பெறப்பட்டனவென்பது இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. ஆனால் இதில் குறிப்பிட்ட பல நூற்றுக்கணக்கான கண்கள் வடக்கு .கிழக்கில் தொடரும் மனித வேட்டைகளின்போது தோண்டியெடுக்கப்பட்டன என்பது மறைந்துள்ள உண்மையாகும். மட்டக்களப்பு. அம்பாறைப் பிரதேசங்களில் கண்களை இழந்து காணாமல்போன மனிதர்களின் குடும்பங்கள் இன்னமும் இருக்கின்றன, மௌனமாய்! . வாய் திறந்தால் இருக்கின்ற கண்களும் இல்லாமல் போகலாம்.

சென்ற ஆண்டு ஏப்ரல். மே மாதங்களில் மட்டக்களப்பை உலுக்கிய நூற்றுக்கணக்கான மர்மக் கொலைகளை எவரும் மறக்க மாட்டர்கள். கண்கள் தோண்டப்பட்டு. தலையற்ற முண்டங்களாய் மட்டக்களப்பு நகரத் தெருக்களிலும் வாவியிலும் கிடந்த பிணங்களை எப்படி மறக்கமுடியும்.

**பி. உத்ரா (ஈழம்)**

குறிப்பிட்ட பல நாட்கள் பள்ளிக்கூடங்கள். ரியூட்டரிகள் தமிழ்க்கடைகள் என்பன மூடப்பட்டு நகரே வெறிச்சோடிப் போயிருந்தது.. நாய்கள்கூட நடமாடுவதற்கு அஞ்சிய நாட்கள் அவை!

மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்திற்கு அருகாமையிலிருந்தும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அருகிலிருந்தும் திடீரென வரும் வெள்ளை 'வான்' ரியூட்டரி அருகிலும் வீதிகளிலும் செல்லும் பெண்களை –குறிப்பாக மாணவிகளை, இளைஞர்களை– தூக்கிப் போட்டுக்கொண்டு திடீரென மர்மமாய் மறைந்துவிடும். இரண்டு மூன்று தினங்களில் கோரத்தனமாய் சதைவெறிக்குப் பலியாகிப்போன பெண்களின் உடல்கள் தலையற்ற முண்டங்களாய் காகங்கள் கொத்தி கரையொதுங்கும். வாவி ஓரங்களில் நகரவீதிகளில் அநாதரவாகக் கிடந்து நாறும்.

பெற்றோரும் பிள்ளைகளும் பல நாட்கள் அச்சத்துடனேயே வீடுகளில் அடைபட்டுக் கிடந்தார்கள். மட்டக்களப்பு நகருக்குள்ளேயே அலுவலகங்கள் திறந்து செயற்படும் ரெலோ, புளொட் இயக்க உறுப்பினர்கள்கூட இந்த நாட்களில் வெளியில் செல்வது மிகவும் குறைவு ! "அவன் 'முனாஸ்' தூக்கிப் போட்டுக்கொண்டு போனானெண்டால் எங்களாலை ஒன்றும் செய்ய முடியாது. வெளியில போறத குறச்சு கொள்ளுங்க" என்று இவ்வலுவகங்களின் அங்கத்தவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டதாம் அந்தநாட்களில்!!
யார் அந்த முனாஸ்? புலிகளுக்கும். இலங்கையரசுசக்கும் "புனித யுத்தம்" தொடங்கப்பட்ட பிறகு முஸ்லீம்களின் நலனைக் கருத்திற்கொண்டு சபாநாயகர் எம். எச். எம். முகமது,. முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஆகியோரின் அனுசரணையோடு. பிரேமதாசாவின் பணிப்பின்பேரில் முஸ்லீம்களின் நலன்களைப் பேணுதல் என்ற போர்வையில் தமிழர்களை அழித்தொழிக்க அனுப்பப்பட்ட சி. ஐ. டி பொறுப்பதிகாரிதான் இந்த முனாஸ் .

இந்த முனாஸ் குழுவினரும். மட்டக்களப்பு புளொட் இராணுவப் பொறுப்பாளர் மோகன் (இந்தச் சம்பவங்கள் நிகழ்வதற்கு நாலைந்து நாட்களுக்கு முன் இவர் புளொட் தலைமையால் தற்காலிகமாக நீக்கப்பட்டதாக நீண்ட காலத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டது!!) குழுவினரும். ரெலோவிலிருந்து வெளியேறிய சிலரும் சேர்ந்தே மட்டக்களப்பில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான படுகொலைகள் பலவற்றின் சூத்திரதாரிகளாவர்.

www.tamilarangam.net

# மலையகத் தோழனுக்கு ......

தோழா !
உதிர்ந்த கொழுந்துக்
கூடையும் – உன்
இரத்தத்தைச்
சுமந்து செல்லும்

உன்
தூரத்துப் பார்வையில்
மேகக் கூட்டங்களும்
தினம் தினம்
கண்ணீர் சிந்துமடா !

மீண்டும் ஒருமுறை
சாவடிப் பெட்டி
உன்
சவப்பெட்டியாய்
பாடைகட்டி
வந்து நிற்கும்.

அப்போதும் நீ
உயர்ச்சியாய்
உன் உயிரை
அதில் போட்டு
மூடுவாய்.

மீண்டும் பெட்டி வரும்
மீண்டும் போடுவாய்
இது உன்
இதயம் துடிக்குமட்டும்
நடக்கும்

மௌனமாய்
யாத்திரைகளில்
கருப்புக் கொடிகளை
கரங்கள் ஏந்தும்.

பின்னரும் நீ
கொழுந்துக் கூடையோடும்
கவாத்துக் கத்தியோடும்
மலைக்குப் போவாய் ....

இப்படி .... இப்படி ......
எத்தனை நாளைக்குச்
செய்வாய் ?
தோழா !
உன் சிந்தனையைத் திற !!
அப்போது
தேசியம்
உனக்குமென்று
உரத்து
நீயும் சொல் !!!

**இளைய அப்துல்லா** – இலங்கை

21 பக்கம் தொடர்

ஏப்ரல். மே மாதங்களில் கண்கள் தோண்டப்பட்டு., தலையற்ற முண்டங்களாய்ப் போடப்பட்ட படுகொலைகளைச் செய்தவர்களும் இவர்களே. கொழும்பிலிருந்து விசேடமாகச் சென்ற இராணுவ மெடிசன் குழுவினருடன் இணைந்தே இக் கண்கள் தோண்டியெடுக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

மட்டக்களப்பில் நூற்றுக்கணக்கான கண்களைத் தோண்டியெடுத்துக் கொடுத்ததிற்காக முனாஸ்க்கு பதவியுயர்வுகளும். இலட்சக்கணக்கான பணமும் கொடுக்ககப்பட்டது. மோகன் குழுவினருக்கு 10 இலட்சம் ரூபா உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அரச பாதுகாப்புப் பிரிவால் வழங்கப்பட்டது. (ஆயினும் இப் பணம் இன்று கொழும்பில் குடித்தனம் நடத்தும் தமிழ் இயக்கங்கட்கு இலங்கையரசால் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தொகையைவிட மிகவும் குறைந்த தொகையே!) மோகன் குழுவினர் இன்னமும் முனாஸ் குழுவினருடன்தான் இருக்கின்றார்கள்

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட இந்த மிலேச்சத்தனமான படுகொலைகளையும். கண்கள் தோண்டியெடுக்கும் காட்டுமிராண்டித்தனத்தையும் செய்தவர்கள் முனாஸ் மோகன் குழுவினர் என்பது சகல இயக்கங்களுக்கும் தெரிந்த விடயம். மக்கள்தான் வாய்திறக்க முடியாத பாவப்பட்ட ஜென்மங்கள். ஆனால் இவர்கள்....?

தன் சொந்த மக்களின் கண்களையே தோண்டியெடுத்துத் தானம் கொடுக்கும் இந்த புத்த தர்மம் வேறெந்த நாட்டில்தான் இருக்கிறது இந்த சிறீலங்காவை விட்டால்?

தங்கள் கண்களும் தோண்டியெடுக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தினால் தமிழ்ப் பாராளுமன்ற நாற்காலிக்காரர்களும்,

34 தொடர் பக்கம்

www.tamilarangam.net

# மலையக மக்கள் – சில குறிப்புகள்

லோரன்ஸ் (இலங்கை)

இனக்கலவரங்களால் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற மலையக மக்கள் மிக குறைந்த தொகையினரே.

இலங்கையில் 77, 81, 83 ம் ஆண்டுகளில் இனக்கலவரங்கள் ஏற்பட்டது. இதில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் மலையக மக்களே. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்திற்கு வெளியே வாழ்ந்த மலையக தமிழ் மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். ஆனால் இவ்விதம் இனக்கலவரங்களால் மலையக மக்கள் பாதிக்கப்பட்டாலும் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற மலையக தமிழ் மக்கள் குறைந்த எண்ணிக்கையினரே என துணிந்து கூறலாம். வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் இலட்சத்தை அண்மித்து விட்டனர். எனவே இதிலிருந்து வெளிப்படுவதெல்லாம் இந்த மக்கள் மிக அண்மைக்காலத்தில்தான் இந்தியாவில் இருந்து வந்திருந்தாலும் அவர்களின் இரத்த உறவினர் தமிழ் நாட்டில் தற்போது இருந்தும் கூட அகதிகளாகச் சென்ற மலையக மக்கள் ஆயிரக்கணக்கானோரே என்பதும் அதற்கு காரணம். அவர்கள் இந்த மண்ணை இரண்டாயிரம் அடிக்கு மேற்பட்ட மலையக பகுதியை தமது தாயகமாக கருதி வாழ்வதுதான் என்பது தெளிவாகின்றது. அவர்கள் மிகத் தெளிவாக இந்த நாட்டை குறிப்பாக மலையக பகுதியை தமது நிரந்தர வசிப்பிடமாக தீர்மானித்து விட்டதை காட்டி நிற்கின்றது.

ஆனால் இதே கால கட்டங்களில் வடக்கிலிருந்து அகதிகளாக இந்தியாவிற்குச் சென்ற தமிழ் மக்களைப் போல் மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது அடிப்படை உரிமைகளாகிய பிரஜா உரிமை பறிக்கப்பட்டு வாக்குரிமை அற்ற நிலையில், அகதிகளாக்கப்பட்டோம் என்ற காரணத்தைக் கூறிக்கொண்டு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்தியாவில் பெரும்பான்மையானோர் சென்று குடியேறி இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. மாறாக நுவரெலியா மாவட்டத்தில் குறிப்பாக மலையக தமிழ் மக்கள் மூன்றிலொரு பங்கிற்கு மேல் வாழ்வதால் 77, 81, 83 கலவரங்களில் இப்பகுதிகளுக்குள்ளேயே அகதிகளாக வாழ்ந்தனர். எனவே இது அவர்களுக்கு இம் மண்ணின் மேல் உள்ள பிடிப்பையும், அவர்களின் தனித்துவத்தையும் கோடிட்டுக் காட்டுகின்றது. வடகிழக்கு மக்களுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எவ்விதம் பாதுகாப்பு பிரதேசமாக விளங்குகின்றதோ அது போன்று மலையக மக்களுக்கு நுவரெலியா மாவட்டம் பாதுகாப்பாக அமையும் என்ற உணர்வு மலையக தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது.

**மலையக மக்களுக்கென ஒரு பாரம்பரிய பிரதேசம் உண்டு.**

மலையக மக்கள் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காகவே பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளால் கொண்டு வரப்பட்டனர். அவ்விதம் அவர்கள் இலங்கைக்கு வந்த போது அதிகமாக காடாக இருந்த பகுதிகளிலேயே அக்காடுகளை அழித்து ஆங்கிலேயர் அவர்களை குடியேற்றினர். அதுவும் குறிப்பாக இரண்டாயிரம் அடிக்கு மேற்பட்ட மலையக பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் அதிகமாக இருக்கவில்லை. ஒரு சில குடியேற்றங்களே காணப்பட்டன. எனவே பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதால் கண்டியை சிங்கள மக்கள் தமது நிலத்தை இழந்தனர் என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒரு கூற்றாகும். ஒரு மிகச் சிறிய பகுதியினரே அவ்விதம் தமது நிலத்தை இழந்திருக்கலாம். குடியிருப்புக்கள் இல்லாத காட்டுப் பிரதேசங்களிலே மலையக மக்கள் பெருந்தோட்ட வேலைக்காக வந்து குடியேறினர். தாமாகவே காடுகளை அழித்து அம்மக்கள் மலையக பிரதேசங்களில் குடியேறினர். ஆகவே அதுதான் அவர்களுடைய பாரம்பரிய பிரதேசமாக உருப்பெற்றது.

நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேல் இப்பிரதேசத்தில் இம்மக்கள் வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் இந்நாட்டில் மொத்த தேசிய உற்பத்தியிலும் மொத்த தேசிய வருமானத்திலும் தமது பாரிய பங்களிப்பை செய்தனர். 20 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட சகல அடிப்படை வசதிகளுக்கும் இம் மக்களால் உருவாக்கப்பட்ட மூலதனமே அடிப்படையாக விளங்கியது. ரயில் பாதைகள், பெருந்தெருக்கள், மின்சார வசதிகள் போன்ற அடிப்படையான தேவைகள் இந்தப் பெருந்தோட்டப் பொருளாதாரத்திலிருந்தே உருப்பெற்றது. இலங்கையில் 80து வீதமான கிராமிய பிரதேசங்களில் அடிப்படை அபிவிருத்திக்கு இம்மக்களது உழைப்பால் கிடைக்கப்பெற்ற வருமானமே பாவிக்கப்பட்டது. எனவே பெருந்தோட்ட மக்களால் கண்டியில் விவசாயிகள் அதாவது சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை விட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருந்தோட்டங்களால் கிடைத்த வருமானத்தை அனுபவித்தார்கள் என்று கூறுவதே சாலப் பொருத்தமாகும்.

இலங்கையில் எந்த மக்கள் கூட்டத்தாலும் பாவிக்கப்படாத காட்டு பிரதேசங்களை அழித்தே மலையக மக்கள் அங்கு வாழ்ந்தனர். அதுவும் 150 வருடங்களுக்கு மேல் பல தலைமுறையாக அப்பகுதிகளில் அவர்கள் வாழ்ந்ததோடு மாத்திரமின்றி அப்பகுதிகளையும் அபிவிருத்தி செய்துள்ளனர். எனவே அப்பகுதிகளை அம்மக்கள் தமது பாரம்பரிய பிரதேசமாக நினைப்பது எந்த விதத்திலும் தவறாகாது. கீழ்வரும் புள்ளி விபரம் மலையக மக்கள் தோட்டப் பிரதேசங்களில் அதுவும் குறிப்பாக இரண்டாயிரம் அடிக்கு மேற்பட்ட மலைப் பகுதிகளில் பெரும்பான்மையாக வாழ்வதை காட்டி நிற்கின்றது.

அங்கீகரிக்கப்படுவது மிக அடிப்படையான அம்சமாகும். இலங்கையில் ஒவ்வொரு இனங்களும் இயற்கையாகவே பாரம்பரிய பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

தேசிய இனங்களுக்கான இனத்துவ அடையாளமானது முதலாளித்துவ பொருளாதாரத்துடன் குறிப்பாக பெருந்தோட்ட பொருளாதாரத்தின் அறிமுகத்துடனேயே படிப்படியாக வளர்ச்சியடைய தொடங்கியது. இக்காலகட்டங்களிலேயே இலங்கையின் நிர்வாக பிரிவுகள் இந்நாட்டின் சிறுபான்மை தேசிய இனங்களுடன் கலந்தாலோசிக்காது அவர்களின் பாரம்பரிய பிரதேசம் தனித்துவத்தை கலந்தாலோசித்து கணக்கில் எடுக்காமல் வரையப்பட்டுள்ளது. எனவே இன்று நிர்வாக பரவலாக்கலைப் பற்றி சிந்திக்கும் போது

**பெருந்தோட்ட சனத்தொகை அமைப்பில் இனரீதியான பங்கமைப்பு: –**

| மாவட்டம் | பெருந்தோட்ட சனத்தெகை | இந்திய தமிழர் | இலங்கை தமிழர் | சிங்களவர் | வேறு |
|---|---|---|---|---|---|
| நுவரெலியா | 312657 | 74.0 | 18.0 | 6.3 | 1.7 |
| பதுளை | 161344 | 72.2 | 13.3 | 7.6 | 1.9 |
| கண்டி | 130495 | 64.6 | 15.6 | 15.3 | 4.5 |
| மாத்தளை | 229777 | 60.5 | 24.7 | 12.3 | 2.7 |
| கேகாலை | 54908 | 69.7 | 13.9 | 16.3 | 0.1 |
| இரத்தினபுரி | 107569 | 78.1 | 8.7 | 11.7 | 1.4 |
| குருநாகள் | 10920 | 37.6 | 14.5 | 47.0 | 0.9 |
| களுத்துறை | 445188 | 70.0 | 8.5 | 20.9 | 0.6 |
| காலி | 20880 | 48.3 | 14.4 | 36.6 | 0.7 |
| மாத்தறை | 20077 | 61.6 | 11.6 | 26.3 | 0.5 |
| மொனறாகலை | 8874 | 67.0 | 18.1 | 17.7 | 0.2 |

**மலையக மக்களுக்கென ஒரு நிர்வாக பரவலாக்கல் அலகு தேவை.**

இலங்கையின் இனப்பிரச்சனையானது சிறுபான்மை தேசிய இனங்களினது தனித்துவம் அங்கீகரிக்கப்படுவதாலும் அவர்களுக்கென நிர்வாக பரவலாக்கல் அலகை வழங்குவதன் மூலமும் இனங்களிடையே பரசுபர புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலமே தீர்க்கப்பட முடியும். தனித்துவமான தேசிய இனம் என்ற உணர்வு மேலோங்கி நிற்கும் போது தனித்துவத்தை அங்கீகரிக்காத எந்த ஐக்கியமும் சாத்தியப்பட மாட்டாது. சிறுபான்மை தேசிய இனங்களின் தனித்துவத்தை பேணிக்காப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையிலேயே இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வு சாத்தியமாகும். தனித்துவம் பேணப்படுவதில் ஒரு தேசிய இனத்தினது பாரம்பரிய பிரதேசம்

பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் ஏற்படுத்திய நிர்வாக அமைப்பு மற்றும் சிங்கள பேரினவாதிகள் ஏற்படுத்திய நிர்வாக அமைப்பு சட்ட வரம்புக்குள் இருந்தே ஒரு நிர்வாக பரவலாக்கல் முறைபற்றி யோசிக்கின்றனர்.

இதுவே சிறுபான்மை தேசிய இனங்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிர்வாக பரவலாக்கல் முறையை ஏற்படுத்துவதற்கு தடையாக உள்ளது. ஆகவே சிறுபான்மை தேசிய இனங்களின் நன்மையை கருதி இலங்கையில் தற்போது நிலவும் நிர்வாகப் பிரிவுகளை மாற்றி அமைப்பது எந்த வகையிலும் பிழையாகாது. மாறாக சிறுபான்மை தேசிய இனங்களினது நம்பிக்கையையும் அதன் ஒத்துழைப்பையும் பெருந்தேசிய இனம் பெறக்கூடியதாக இருக்கும். மலையக மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நுவரெலியா



26 பக்கம் தொடர்

www.tamilarangam.net

# கிளின்ரனிடம் எதிர்பார்க்கலாமா ????

குவைத்தை ஈராக்கின் 19 வது மாகாணமாக பிரகடனப்படுத்தி, ஈராக் ஆக்கிரமித்ததன் விளைவு 1991 பெப்பிரவரியில் அமெரிக்காவுடன் நேசநாடுகள் (பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன்) ஈராக்கின்மீது குண்டுமழை பொழிந்தன.

இதன் விளைவுகளால் ஏற்பட்ட ஐநா ஒப்பந்தத்தின்படி, ஈராக்கின் விமானங்கள் ஈராக்கின் தென்பகுதிக்குள் பறக்க 'அனுமதிக்கப்படவில்லை'. கடந்த டிசம்பர் மாதம் ஈராக்கின் விமானம் இவ் எல்லைக்குள் பறந்தபோது அமெரிக்கா மற்றும் நேசநாடுகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது. ஈராக் ஐநா ஒப்பந்தத்தை மீறிவிட்டது எனக் கூறிய இந் நாடுகள், மேலும் தென்பகுதியிலுள்ள ஏவுகணைகளை அகற்றும்படி ஈராக்கிற்கு கால அவகாசம் கொடுத்தன. அதற்கு ஈராக் "ஸ்ரேல், யூகோஸ்லாவியா போன்ற நாடுகள் ஐநா ஒப்பந்தத்தை மீறும்போதெல்லாம் இந்த நாடுகள் (அமெரிக்கா மற்றும் நேசஅணி) மௌனம்சாதித்து விடுகின்றன" என குற்றஞ்சாட்டியதுடன், "மேற்குலகத்திற்கு அடிபணியப் போவதில்லை" என்றும் தனது (தொலைக்காட்சி) உரையில் குறிப்பிட்ட சதாம் குஷைன், முஸ்லிம்களின் புனிதப்போரை (ஜிகாத்) எதிரிக்கு எதிராகத் தொடங்கும்படி தனது படைகளுக்கு உத்தரவும் இட்டார்.

மன்னர் 'ஷா' 1979 இல் ஈரானை விட்டு ஓடி ஆயத்துல்லா கொமெய்னி பதவிக்கு வந்தபோது, அமெரிக்காவின் நலனுக்கு அது பாதகமாக அமைந்திருந்தது. அத்தோடு ஈராக் ஊடாக 'முன்னைய சோவியத்யூனியன்' அரபுநாடுகளுக்குள் முன்னேறி எண்ணெய் விநியோகம் தடைப்பட்டு விடலாம் என்ற அச்சம் மேற்குலகத்திற்கு இருந்தது. தங்கள் நலன்களை முதன்மைப்படுத்தி அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன் போன்ற நாடுகள் (இன்று நீலிக்கண்ணீர் வடிக்கும்) ஈரான் உடன் ஈராக் போர்தொடுப்பதற்கு ஆயுத விற்பனை செய்து, உத்வேகமும் கொடுத்தன. இந் நாடுகள் கொடுத்த ஆயுதங்களே ஈரான் சண்டையில் ஈராக் வெற்றிநடை போடவைத்தன.

ஆயுத விற்பனையில் சோவியத்யூனியனும் சீனாவும் கடன்அடிப்படையில் ஈராக்கிற்கு கொடுத்த ஆயுதங்களுக்கான தொகையை ஈராக் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் செலுத்தியதால், இந் நாடுகள் தங்கள் ஆயுத விநியோகத்தைக் குறைத்துக்கொண்டன. மாறாக, மேற்குலக நாடுகள் இராணுவச் செலவினங்களுக்கான கடன் உதவியை அள்ளிவழங்கியது. தாங்கள் கொடுத்த விமானங்கள் டாங்கிகள் உடன் ஈராக் இராணுவத்திற்கு பயிற்சி அளித்தும், ஏவுகணைகள், இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதற்கு உபகரணங்களை வழங்கியும், தங்கள் நிபுணர்களை அனுப்பியும் உதவிபுரிந்தன.



இன்று ஈராக்கின் இரசாயன ஆயுதங்கள் மற்றைய நாட்டிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்காவும் நேசநாடுகளும் கண்ணீர் வடிக்கின்றன. இவ் இரசாயன ஆயுதஉற்பத்திக்கு ஜேர்மன் உதவிசெய்தபோது, இவர்கள் எவ்வித எதிர்ப்போ அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அமெரிக்க தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்ட வேட்பாளர் றொஸ் பெரோ தனது தேர்தல் கூட்டத்தில், "ஈராக் அணுஆயுதம் தயாரிப்பதற்கு நாங்கள் (அமெரிக்கா) கொடுத்த ஆயுதங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு, தெற்கு பகுதிகளுக்கு விமானம் பறக்கக்கூடாது' என்பது ஐ.நா தீர்மானத்தில் இல்லையென்றும், தாங்கள் வடக்கு, தெற்கு பகுதிகளிலுள்ள எதிரிகளின் இராணுவத் தளங்களை தாக்குவதில்லையென தீர்மானித்துள்ளதாகவும் சதாம் கூறினார்.

புஷ் விமானப்படை, CIA தலைமை போன்றவற்றில் பெற்ற அனுபவங்களுடன், தனது அதிகாரத்தை கிளின்ரன் பதவியேற்கும்வரை சிறிதும் தளர்த்தாது ஈராக்கின்மீது குண்டுவீசியதுடன், சதாமை பதவியிலிருந்து நீக்குவதற்கு உலகநாடுகளின் ஆதரவையும் கோரினார். அத்தோடு சதாமுக்கு எதிராகச் செயற்படும் ஈராக்கின் எதிர்கட்சிகள், குழுக்களுக்கு ஆதரவை அளிக்கும்படி அறைகூவல் விட்டார். இப் போராட்டம் சதாமுக்கு எதிராக அமெரிக்க இராணுவத்தின் போராட்டம் இல்லை. அமெரிக்க மக்களுக்கும் சதாமுக்கும் இடையிலான போராட்டம் என அமெரிக்க தேசியவெறியை கக்கியபடி தனது பதவியைத் துறந்தார்.

இதேநேரம் சதாம் 'தற்பொழுது நடத்தும் போர் முஸ்லிம் மக்களின் புனிதயுத்தம்' எனக் கூறினாலும், குர்திஷ் மக்களுக்கு (முஸ்லிம்) எதிராக இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததை உலகம் அறியும். தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதன்மூலம் அவற்றிற்கு தேவையான இராணுவ தளபாடங்களை வாங்கி, நாட்டை மேலும் கடனுக்குள்ளாக்கி, மக்களுக்கு பொருளாதார பளுவை ஈராக் கூட்டிக்கொண்டே போகிறது.

கூடிய பங்கை வகித்துள்ளது" என்று கூறியதை புஷ் மறுத்தார். ஆனால் ஐ.நா அதிகாரிகள் ஈராக் அணுஆயுதம் தயாரிப்பதற்கு அமெரிக்கா கொடுத்த உபகரணங்களும் உதவி செய்துள்ளதாக அறிக்கை விட்டுள்ளார்கள்.

ஈராக்கிய விமானத்தை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியதில் இருந்து ஈராக்கின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் எல்லைவகுத்து ஈராக்கின் விமானங்கள் இவ் எல்லைக்குள்ளேயே பறக்க அனுமதித்ததுடன் நின்றுவிடாது, அமெரிக்கா ஈராக்கின் இராணுவத் தளங்களை தகர்ப்பதாகக்கூறி குடியிருப்புப் பகுதிகள், விடுதிகள் போன்றவற்றைத் தாக்கியுள்ளது. ஆனால் 'ஈராக்கின் 1991 இல் நடந்த போரின்போது கணிசமான நாடுகளின் ஆதரவை அமெரிக்கா பெற்றிருந்தது. ஆனால் இம்முறை அமெரிக்கா தொடர்ந்து ஈராக்கின்மீது தாக்குமானால், சீனாவும் ரஷ்யாவும் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தப் போவதாக கூறியுள்ளன. அத்தோடு நேசநாடுகளில் ஒன்றான பிரான்ஸ் ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா ஏவாயுதங்களைப் பயன்படுத்தியதை கண்டித்துள்ளது.

42 வது அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற கிளின்ரன், சதாம் ஒருபக்கமாகக் கோரிய யுத்தநிறுத்தத்தைப் பற்றி எந்தக் கவனமும் செலுத்தாமல், வட ஈராக்கின் ஏவாயுத பகுதிகளில் ஏவாயுதங்கள், கிளாஸ்டர் குண்டுகளை போட்டுள்ளதுடன், புஷ் அமைச்சரவையில் உதவி ராஜாங்க அமைச்சராகவும், ஈராக்கின் நிபுணராகவும் இருந்த றொபேட் கலுசியை தனது அமைச்சரவையில் சேர்த்துமுள்ளார். கிளின்ரன் உடன் பேச்சுவார்த்தை மூலமாக சுமுகமான உறவை ஏற்படுத்த விரும்புவதாக ஈராக் சபாநாயகர் விட்ட அறைகூவலுக்கு சதாம் பதவியில் இருக்கும்வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என கிளின்ரன் சி.பி.எஸ் க்கு கொடுத்த பேட்டியில் கூறியுள்ளார். இந் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது கிளின்ரன் கடினமான போக்கையே கடைப்பிடிப்பார்போல் தோன்றுகிறது.

""மணி""

* * * * * * * *

24 பக்கம் தொடர்

மாவட்டத்தில் முதலாவது நிலைமையிலும், பதுளை மாவட்டத்தில் இரண்டாவது நிலையிலும், கண்டி மாவட்டத்தில் மூன்றாவது நிலையிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் நான்காவது நிலையிலும் காணப்படுகின்றனர். இந்த பெருந்தோட்ட மாவட்டங்களில் வரும் பெரும் தோட்ட பகுதிகளை ஒன்றினைத்து மலையக மக்களுக்கான ஒரு நிர்வாக பரவலாக்கல் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே மலையக மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளையும் அவர்களின் தனித்துவத்தையும் பேண முடியும். இது மலையக மக்களுக்கான மலை மாகாணமாக அமையலாம். இந்த மலையக மாகாணத்திற்கான அதிகார பரவலாக்கல் மலையக மக்களுடன் கலந்தாலோசித்து வரையறுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தின் பெரும்பகுதி இந்நாட்டின் பெருந்தோட்டமல்லாத கிராம பகுதிகளின் வளர்ச்சிக்கும் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குமே பயன்படுத்தப்பட்டது. ஆகவே பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் வரும் வருமானத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மலையக மக்களுக்கே கொடுக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் மலையக மக்களுக்கென ஏற்படுத்தப்படும் நிர்வாக பரவலாக்கல் அலகில் பெருந்தோட்ட பொருளாதாரத்தை நிர்வகிக்கும் பொறுப்பை அந்த நிர்வாக அலகின் கையில் விட வேண்டும்.

இது போன்று காணி, மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களிலும் தம்மை தாமே நிர்வகிக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். எனவே மலையக மக்களுக்கென ஏற்படுத்தும் நிர்வாக அலகு மூலம் மாத்திரமே அம்மக்களினது உரிமைகளும், அவர்களுக்கான பாதுகாப்பும் கலாச்சார தனித்துவமும் பேணப்படும்.

முற்றிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரிநிகர் சிவகுமார் மீதான தாக்குதலும்

## பத்திரிகையாளர் மீதான தொடர் வன்முறையும்

சென்ற 17.10.92 சனி காலை 11 மணியளவில் நுவரெலியா நகரில் சரிநிகரின் சகோதர பத்திரிகையான 'யுத்திய' விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பல குண்டர்களினால் சரிநிகர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சிவகுமார் கோரமாகத் தாக்கப்பட்டதோடு அவரது 'கமரா பிளாஷ்' உம் பறிக்கப்பட்டது. இவருடன் சேர்ந்து 'யுத்திய' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த கோ.செனிவரத்தினா, சமன், சூழவன்ச, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் செயலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோரும் தாக்கப்பட்டனர். ஏற்கனவே அக்ரோபர் மாத இரண்டாவது வார யுத்திய, ராவய பத்திரிகைகள் நுவரெலியா நகர கடைகளில் போடப்பட்டிருந்தபோது நுவரெலிய நகர மேயர் திருமதி நளின் திலகரேத் தனது வாகனத்தில் வந்து அதனைப் பறித்துச் சென்றிருந்தார். அச்சம்பவத்தை கண்டிக்கும் முகமாகவே இவ் விற்பனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. விற்பனையோடு மக்கள் மத்தியில் பத்திரிகைகள் பறிமுதல் செய்ததைக் கண்டித்து பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது.

பத்திரிகையாளர்கள் இலங்கையில் தாக்கப்படுவது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும்கூட பலர் தாக்கப்பட்டுள்ளனர். சென்ற சில மாதங்களுக்கு முன்னர் 'அத்த' பத்திரிகையின் கேலிச்சித்திரக்காரர் யூனூஸ் தாக்கப்பட்டிருந்தார். சில மாதங்களுக்கு முன்னர் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஜனநாயக ஐக்கிய விடுதலை முண்ணனியினர் அரசுக்கெதிரான கையெழுத்து சேகரிப்புப் போராட்டம் நடாத்தியபோது அதனைப் புகைப்படம் எடுப்பதிலும் செய்தி சேகரிப்பதிலும் ஈடுபட்டிருந்த வெளிநாட்டு உள்நாட்டு பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய விலை உயர்ந்த புகைப்படக் கருவிகளும் சேதமாக்கப்பட்டிருந்தது. சில தினங்களுக்கு முன்னர் 'ஏசிய வீக்' பத்திரிகை நிருபர் யோன் கெஸ்மி தேசிய புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். இவருடைய கைதுபற்றி ஜனாதிபதியின் சர்வதேச செயலாளர் பிரட்மன் வீரக்கோனுக்கு நிருபர் அறிவித்தபின்தான் தெரிந்தது என்பது நகைப்பிற்குரியது. ஏற்கனவே பத்திரிகையாளர் யாராவது கைது செய்யப்பட்டால் அது தனக்கு உடனே தெரியவரும் என பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் கூறி இருந்தார்.

இவற்றினைவிட ஜே.வி.பி அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது சர்வதேச பத்திரிகையாளரான றிச்சாட் டி. சொய்சா அரசின் கரும் பூனைப் படையினரால் கொல்லப்பட்டிருந்தார். அவரது உடல் தெருவில் வீசப்பட்டிருந்தது.

இவ்வாறான பத்திரிகையாளர் மீதான அரசின் வன்முறைகளையும் அரசின் ஜனநாயக விரோதப் போக்குகளையும் கண்டித்திருந்த சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் இலங்கை அரசுக்கு 32 ஆலோசனைகளை சிபார்சு செய்திருந்தது. அவ் ஆலோசனைகளில் 28 ஆலோசனைகளை அமுலாக்குவதற்கு அரசும் ஒப்புக் கொண்டிருந்தது. ஒப்புக்கொண்டவற்றில் பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தைப் பேணுதலும் ஒன்றாகும்.

அரசின் அத்துமீறல்களுக்குப் புறம்பாக ஆயுதக் குழுக்களின் அத்துமீறல்களுக்கு பலதடவைகள் இலங்கைப் பத்திரிகையாளர்கள் முகங்கொடுக்க வேண்டி நேரிட்டது. இச் சம்பவங்களில் பெரும்பாலானவற்றிற்கு யாழ்ப்பாணப் பத்திரிகைகளும் பத்திரிகையாளருமே முகங்கொடுத்திருந்தனர். அனைத்து இயக்கங்களும் யாழ்ப்பாணத்தில் கோலோச்சியிருந்த காலத்தில் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் வெளியிடுமாறு பத்திரிகையாளர் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதனை வெளியிட மறுத்த பத்திரிகையாளர்கள் மிரட்டப்பட்டனர். பத்திரிகையாளர்கள் எந்த இயக்கத்திற்கு சார்பானவர் என உளவு பார்க்கப்பட்டனர். இவர்களில் யார் யார் தங்களுக்கு எதிரான செய்திகளை கொடுக்கின்றனர் என்று அவதானிக்கப்பட்டனர். இதனால் பத்திரிகையாளரும் அஞ்சி செய்திகளைப் போடாதிருந்தனர். உதாரணமாக 1987 இல் புலிகளால் பாசையூர் இளைஞர் கொலை செய்யப்பட்டபோது அவ் ஊர் மக்கள் அதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடாத்தியிருந்தனர். ஆனால் அக் கொலைச் செய்திகளோ மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளோ யாழ்ப்பாணத்தின் எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை.

இதற்குப் பின்னர் மாகாணசபை ஆட்சிக் காலத்தின்போதும் EPRLF இயக்கத்தினரால் பத்திரிகையாளர் அச்சுறுத்தப்பட்டனர். தமது செய்திகளைத் தவிர வேறு

தொடர் பக்கம் 32



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையிலிருந்து சில செய்திகள்

## தொண்டமான் வெளியேறியும் வெளியேறாத தமிழ்க் குழுக்கள்

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு தனது பணியினை முடிக்கும் கட்டத்திற்கு வந்துள்ளது. வடக்கு–கிழக்கு இணைபையும் எதிர்த்து, சமஷ்டியையும் எதிர்த்து, இந்திய மாதிரியையும் எதிர்த்து SLFP அறிக்கை விட்டபின் எவற்றையும் தீர்க்கமுடியாத நிலையில் தெரிவுக்குழு தனது அறிக்கையை கையளிக்க உள்ளது. ஜனாதிபதியும் தம்மால் மேடையேற்றப்பட்ட ஒரு நாடகம் முடிவுக்கு வருவதனைக் கண்டு வேறு நாடகத்தை மேடையேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். உயர்கல்வி அமைச்சர் ஹமீதின் பாரிஸ் பயணமும், 'கத்தோலிக்க மதகுருமார்களின் யாழ்ப்பாணப் பயணமும் இப் புதிய நாடக முயற்சிகளே !

தெரிவுக்குழுவின் முயற்சிகள் புஸ்வாணமாகிப் போவதை முன்னமே அறிந்துகொண்ட தொண்டமான் தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் தெரிவுக்குழுவினால் நிராகரிக்கப்படட்டதைக் கண்டித்து தெரிவுக்குழுவை பகிஸ்கரிக்கப் போவதாக அறிக்கை விட்டுள்ளார். இதன்மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் 'புரிந்துகொண்ட', 'வளர்ந்த' தலைவனாக அவர் உயர்ந்துள்ளார்.

ஆனால் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட பின்னும் வடக்கு–கிழக்கு மக்களுக்கு பொறுப்புச் சொல்லவேண்டிய தமிழ்க் குழுக்கள் இன்னமும் தெரிவுக்குழுவுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன செய்வது! இ.தொ.கா வைப் போல தன்னிச்சையாக முடிவு எடுக்கும் நிலையில் அக் குழுக்கள் இல்லை. இந்திய அரசினதும் இலங்கை அரசினதும் கட்டளைப்படியே அவர்கள் ஆடுகிறார்கள். EPRLF, ENDLF என்பன இந்திய அரசின் கட்டுப்பாட்டிலும், TELO, PLOT, EPDP,TULF என்பன இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலும் தற்போது உள்ளனர். இவ் அரசுகளை இவர்கள் எதிர்த்தால் அவர்களுக்கான 'கோட்டா' தடைப்பட்டுவிடும் என இவர்கள் அஞ்சுகிறார்கள். கொழும்பில் இவர்கள் அனுபவிக்கும் வீடு, கார் ........ எல்லாமே இவ்அரசுகளுடையனவே!

** *** **

## சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கோஷ்டி யுத்தம் !

### அனுராவை ஓரம்கட்ட தாயும் மகளும் முயற்சி !!

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் அனுராவுக்கும் சந்திரிகாவுக்கும் இடையிலான கோஷ்டிச் சண்டை வாய்ச்சண்டையாக இருந்த நிலைமாறி கைச்சண்டையாக உயர்ந்துள்ளது. அண்மையில் கொரகொல்லையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் இரு கோஷ்டிகளின் ஆதரவாளர்களும் கைகலப்பில் ஈடுபட்டனர். தாய் சிறிமாவினாலேயே சண்டையை நிறுத்த முடியாத அளவுக்கு சண்டை உக்கிரமானதாக இருந்தது.

கட்சித் தலைமையின் அடுத்த வாரிசு யார்? என்பது தொடர்பான அதிகார இழுபறிப் போராட்டம் கட்சிக்குள் நீண்டநாட்களாகவே நடைபெற்று வருகின்றது. சிறிமா இதில் சந்திரிகா பக்கமே உள்ளார். அடுத்த வாரிசாக சந்திரிகா வருவதையே அவர் விரும்புகின்றார். அதற்கான தயாரிப்பு வேலைகளிலேயே அவர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார். இத் தயாரிப்பு நடவடிக்கைகளின் முதற்கட்டமாக கட்சிக்குள் முக்கிய பதவிகளில் இருக்கும் அனுராவின் ஆதரவாளர்களை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவ்விடங்களில் சந்திரிகாவின் ஆதரவாளர்களை நியமித்து வருகின்றார். கட்சியின் உப தலைவராக இருந்த –அனுராவின் மிகத் தீவிர ஆதரவாளராக இருந்த– சூரியப்பெருமா இவ்வாறே பதவிலியிருந்து நீக்கப்பட்டார்.

சிறிமா இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டாலும் தான் நினைத்த மாதிரி அனுராவை ஓரம்கட்டுவது இலகுவானதாகவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியில் சக்தி வாய்ந்த பிரிவினராகவும் கூடுதலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டவர்களாகவும் விளங்குகின்ற 'கெல உருமய' பிரிவினர் அனுராவின் ஆதரவாளர்களாகவே உள்ளனர். இவர்களின் ஆதரவு இருக்கும்வரை தாயும் மகளும் என்னதான் முயற்சி செய்தாலும் அனுராவை தாம் நினைத்தமாதிரி ஓரம்கட்டி விடமுடியாது. இதைவிட 'கெல உருமய' பிரிவினர் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஆதரவாளர்களாகவும், உள்ளமையால், பிரேமதாசாவின் ஆதரவினையும், தீவிர இனஎதிர்ப்பைக் கொண்டுள்ளமையால் பௌத்த நிறுவனங்களின் ஆதரவையும் கணிசமானளவு பெற்றுள்ளனர்.

## இ. தொ. கா வில் உடைவும் பிரேமதாஸாவின் புதிய தந்திரமும்

தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிறுவனத்தில் புதிய உடைவு ஏற்பட்டுள்ளது. காங்கிரஸின் முக்கியஸ்தர்களாக விளங்கிய மத்திய மாகாண சபை உறுப்பினர் கந்தசாமி நாயுடுவும் மேல் மாகாண உறுப்பினர் இராமதாசும் கட்சியிலிருந்து தமது ஆதரவாளர்களுடன் வெளியேறி காமினி திசநாயக்காவின் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய விடுதலை முன்னனி (DUNF) யில் சேர்ந்துள்ளனர்.

அதேவேளை இதுவரை காலமும் இ.தொ.கா வை ஆதரித்து வந்த இலங்கைவாழ் தெலுங்கு மக்களின்அமைப்பான அகில இலங்கை தெலுங்கு காங்கிரசும் தனது ஆதரவை நிறுத்தி தனித்து தேர்தல்களில் போட்டியிட முன்வந்துள்ளது. இந்த வருடம் யூனில் நடைபெற இருக்கும் மாகாணசபைத் தேர்தலில் சுயேட்சை பட்டியலில் போட்டியிடுவதற்கென தேர்தல் அறிக்கையையும் அது தயாரித்துள்ளது.. இலங்கையில் நகர்ப்புறங்களில் நகர சுத்தித் தொழிளாளர்களாக விளங்குபவர்கள் இத் தெலுங்கு இன மக்களாவர்.

இ.தொ.கா விற்குள் ஏற்பட்ட இவ் உடைவுக்கு பிரேமதாஸாவின் மறைமுக செயற்பாடுகளும் தொடர்புபட்டிருக்கின்றன. இ.தொ.கா தொடர்பிலும் மலையகம் தொடர்பிலும் பிரேமதாசா அரசாங்கம் இரண்டு தந்திரோபாய நடவடிக்கைகளைக் கையாள்கின்றது.

1. இ.தொ.கா வின் பேரம் பேசும் சக்தியைத் குறைத்தல்

2. மலையகத்தில் தேசிய இயக்கம் ஒன்றை வளர விடாமல் தடுத்தல்

முதலாவது தொடர்பில், இ.தொ.கா பலமாக இருக்கின்றபோதே அதனுடைய பேரம் பேசும் சக்தியும் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே இ.தொ.கா வின் பலத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் அதன் பேரம் பேசும் சக்தியையும் குறைக்க முயற்சிக்கின்றது.

இ.தொ.கா வின் பேரம் பேசும் பலமானது அது வளர்த்து விட்டிருக்கின்ற இந்தியத் தேசியத்திலும், அதற்கு இருக்கின்ற தொழிற்சங்க பலத்திலுமே தங்கியுள்ளது. பிரேமா அரசாங்கம் இந்தியத் தேசியத்தை உடைக்கும் வகையில் இந்தியர்களிடையே காணப்படுகின்ற சாதிச்சங்கங்கள், இனஅமைப்புக்கள் என்பனவற்றினை வளர்த்து விடுகின்றது. இதன் அடிப்படையிலேயே தெலுங்கு காங்கிரசு தனியாக இயங்கத் தொடங்கியுள்ளது. தெலுங்கு காங்கிரசை தனியாக அழைத்து ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிக்கும்படி ஜனாதிபதி கேட்டுள்ளார்.

மற்றைய பலமான தொழிற்சங்கப் பலத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில் அமைப்பில் முக்கியஸ்தர்களாக விளங்கியவர்களைக் கட்சியிலிருந்து வெளியேறத் தூண்டுகின்றது. அதேவேளை பெருந்தோட்டத் துறையின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையிலும் நாடெங்கிலும் 200 க்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்கி வருகின்றது. தற்போது இலங்கையின் அதிகூடிய ஏற்றுமதி வருமானம் ஆடை ஏற்றுமதியின் மூலமே பெறப்படுகின்றது.

பிரேமா அரசாங்கத்தின் மற்றய தந்திரமான 'மலையகத்தில் தேசிய இயக்கம் வளர விடாது தடுத்தல்' என்பதிலும் மிகக் கவனமாக உள்ளது. மலையக மக்கள் முன்னணி மீதான நடவடிக்கைகள் இதன் அடிப்படையில் எழுந்தவையாகும். மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் விடுவிக்கப்படுவதைத் தவிர்க்கின்ற அதேவேளை அதன் ஆதரவாளர்களையும் செயற்படவிடாது தடுத்துள்ளது. அத்தோடு மலையகத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய இயக்கம் வளருவதற்கு ஏதுவாக உள்ள நிலத்தொடர்ச்சியை தடுக்கும் வகையில் மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

www.tamilarangam.net

# மீண்டும் UNP இல் ரோனி

சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக லண்டனில் அஞ்ஞாதவாசம் இருந்த முன்னாள் நிதியமைச்சர் ரோனி டிமெல் திரும்பவும் UNP யில் சேர்ந்துள்ளார். ஜனவரி 18ம் திகதி கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மகாநாட்டில் கலந்துகொண்டதன் மூலம் UNP யில் சேர்ந்துள்ளார்.
ரோனி ஆரம்பத்தில் SLFP இல் உறுப்பினராக இருந்தார். 1977 தேர்தல் காலத்தில் SLFP வெல்லமுடியாது என்பது தெரிந்தவுடன் UNP யில் சேர்ந்தார். தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் J:R இனால் உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் நிதியமைச்சராகவும் பதவி ஏற்றார். 1987 இல் J.R உடன் ஏற்பட்ட முரண்பாட்டினால் நிதியமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து கட்சியை விட்டு வெளியேறி SLFP யில் திரும்பவும் சேர்ந்தார்.

1988 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சிறீமாவுக்கு ஆதரவாக தேர்தல் கூட்டங்களில் எல்லாம் பேசினார்.அதில் பிரேமதாசாவின் வீடமைப்புத் திட்டம் புஸ்வாணமானது. என்றெல்லாம் பேசி இருந்தார். தேர்தல் முடிவுகள் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்தமையினாலும், மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுத பயமுறுத்தலுக்கு அஞ்சியும் நாட்டைவிட்டு லண்டனுக்கு ஓடிப் போனார். 1988 இல் தேர்தலில் ஆட்சிக்கு வந்த பிரேமதாசா அரசாங்கம் இவருக்கு எதிராக ஊழல் வழக்கைத் தொடுத்திருந்தது. வழக்கில் ரோனி கலந்து கொள்ளாவிட்டாலும் அவரின் சார்பில் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து லலித்–காமினி குழுவினர் வெளியேறி DUNF ஐ அமைத்தபோது இவரும் அதில் சேர்ந்துகொண்டார். இவர் நாட்டில் இல்லாவிட்டாலும் தனது மனைவியினூடாக பணிகளில் ஈடுபட்டார். திருமதி ரோனி DUNF இன் முக்கிய பிரமுகராகவும் கருதப்பட்டதோடு முக்கிய பதவியையும் பொறுப்பேற்றிருந்தார்.

காலப் போக்கில் DUNF இன் செல்வாக்கும் இவர் எதிர்பார்த்ததைப் போல வளராதிருக்கவே மீண்டும் யு.என்.பி யில் சேருவதற்கு முயற்சி செய்தார். பிரேமதாசாவுக்கும் லலித்–காமினி வெற்றிடத்தை நிரப்புவதற்கு செல்வாக்குள்ள ஒருவர் தேவைப்பட்டது. அதனால் ரோனியின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார். தொடர்ச்சியாக நீண்டகாலம் இருதரப்பிற்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. பேச்சுவார்த்தைகிளின் முடிவில் ரோனி மீதான வழக்குகள் அனைத்திலிருந்தும் ரோனி விடுவிக்கப்பட்டார். திருமதி ரோனி DUNF இல் தான் வகித்த பதவிகள் அனைத்திலிருந்தும் வாபஸ் வாங்கிக் கொண்டார்.

இறுதியாக கடந்த 14ம் திகதி ரோனி டி. மெல் லண்டனில் இருந்து இலங்கைக்கு வந்தார். இவரை விமான நிலையத்தில் வைத்து வரவேற்பதற்காக 50 க்கும் மேற்பட்ட Ever Green பஸ்கள் யு.என்.பி ஆதரவாளர்களுடன் சென்றன. ரோனியின் வருகையை யு.என்.பி க்குள் பலர் விரும்பவில்லை. குறிப்பாக இவருடைய சொந்த பிரதேசமான 'புளத் சிங்கள' பகுதியின் பாராளுமன்ற உறுப்பினரின் தூண்டுதலினால் எதிர்ப்பு தொடரில் ஒரு கொலையும் நிகழ்ந்துள்ளது. எனினும் ஜனாதிபதி ரோனியின் பக்கமே உள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பஜிரோ ஜீப்புகளை யுத்த முனைக்கு அனுப்ப வேண்டும்

**பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா**

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள பஜிரோ ஜீப்புகளை. வடக்கு கிழக்கு யுத்த முனைகளுக்கு இராணுவத்தினருக்கு உதவியாக அனுப்ப வேண்டும் என பிரதி சபாநாயகர் அண்மையில் பாராளுமன்றத்தில் கேட்டுள்ளார். வடக்கு, கிழக்கில் யுத்தம் புரியும் இராணுவத்தினருக்கு வாகனங்கள் பற்றாக்குறையாக உள்ளது என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஜீப்புகளை அன்பளிப்புச் செய்தால் அது அவர்களுக்கு உதவியாகவும், ஊக்கியாகவும் இருக்கும் என்றும் கூறியுள்ளார். இதற்கு முன்னோடியாக தனது 32–8142 இலக்கமுடைய ஜீப்பினை தான் கொடுப்பதாகவும் கூறினார். அவ் ஜீப்பினை தான் இனிமேல் பயன்படுத்தப் போவதில்லை என்றும். பாராளுமன்ற செயலாளரிடம் யுத்தமுனைக்கு அனுப்புவதற்காக ஒப்படைக்க விரும்புவதாகவும் கூறினார்.

கூறியதுபோலவே பிரதி சபாநாயகர் பாராளுமன்ற செயலாளரிடம் ஒப்படைத்தும், அவர் அதனை பொறுப்பெடுக்கவில்லை. பாராளுமன்றத்திற்கு சொந்தமான வாகனத்தை யுத்தமுனைக்கு அனுப்ப தனக்கு அதிகாரமில்லை என அவர் கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போது அந்த் ஜீப் வண்டி, பாராளுமன்ற கார்தரிக்கும் இடத்தில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

இவ் ஜீப்பினைவிட இவருக்கு 18–196 இலக்கமுடைய. ரொயாட்டா GROWN காரும் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டுள்ளது. இக் காரின் பராமரிப்புக்காக மாதம் 12,000 ருபா பணமும். அரசாங்கத்தினால் ஜீப்பை யுத்தமுனைக்கு அனுப்புவதற்குப் பதிலாக பிரதி சபாநாயகர் தனது காரை யுத்தமுனைக்கு அனுப்பியிருக்கலாம் என கொடுக்கப்படுகிறது. பிரபல சிங்கள வாரப் பத்திரிகையான யுத்திய கிண்டலடித்துள்ளது.

# அகதி வாழ்வே வாழ்வாகி . . . .

இதுவரை காலமும் நாட்டுக்கு வெளியேதான் அதிகளவில் தமிழ் பேசும் மக்கள் அகதிகளாவது வழக்கம். தற்போது நாட்டுக்குள்ளேயே இலட்சக்கணக்கில் அகதிகளாய் உள்ளார்கள். இராணுவத்தின் கெடுபிடிகளினால் தமிழ் மக்களும், புலிகளின் கெடுபிடிகளினால் முஸ்லிம் மக்களும் இவ்வாறு அகதிகளாக உள்ளார்கள். அகதி முகாம்கள் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வடக்கு–கிழக்கிலும் அதற்கு வெளியேயும் அமைக்கப்பட்டுள்ளது. அரசுசார்பற்ற நிறுவனங்கள் அகதிகளை பராமரிக்கின்ற பணிகளை மேற்கொண்டபோதும் அதன் தரம் மிகவும் மோசமானதாகவே உள்ளது.

**அகதி முகாம்களினதும் அகதிகளினதும் விபரங்கள் :**

## வடக்கு – கிழக்கு மாகாணங்கள் :

| மாவட்டம் | அகதிகளின் எண்ணிக்கை | அகதி முகாம்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 64.767 | 188 |
| முல்லைத்தீவு | 16.689 | 32 |
| கிளிநொச்சி | 7.948 | 12 |
| வவுனியா | 2.964 | 07 |
| மட்டக்களப்பு | 32.433 | 27 |
| அம்பாறை | 23.898 | 25 |
| திருகோணமலை | 29.850 | 12 |
| மன்னார் | 28.751 | 12 |
| **மொத்தம்** | **210.300** | **315** |

## வடக்கு – கிழக்கிற்கு வெளியே :

| மாவட்டம் | அகதிகளின் எண்ணிக்கை | அகதி முகாம்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அனுராதபுரம் | 24.650 | 50 |
| கொழும்பு | 1.944 | 12 |
| குருநாகல் | 4.648 | 37 |
| பொலன்னறுவை | 1.520 | 11 |
| புத்தளம் | 32.427 | 133 |
| கம்பகா | 275 | 02 |
| **மொத்தம்** | **65.464** | **245** |

இதைவிட கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற அளவெட்டி தாக்குதலினால் 30,000 பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி சுன்னாகம், கொக்குவில், உடுவில் பகுதிகளில் தெரிந்தவர்கள் வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமலையில் அத்துமீறிக் குடியேற்றம் !

## தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் சதி முயற்சி !!

அண்மைக் காலமாக திருமலை நகரப் பகுதியில் இந்துக் கோவில்களுக்குச் சொந்தமான காணிகளிலும் தமிழர்களுக்கு சொந்தமான காணிகளிலும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரத்தடி லிங்கநகர், சோனகத் தெரு, கோவில்பூமி, மட்டிக்களி, கூளாவடி, கரிஸ்தாவத்தை, மேலியா, நாகராஜாவளவு போன்றவற்றில் இவ்வாறான அத்துமீறல் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

புத்த மதகுரு ஒருவரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் இக் குடியேற்றங்களில் குடியேறியவர்களுக்கு காணி உத்தரவுப் பத்திரம் வழங்கி சட்டரீதியாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தபோதும் குடியேற்றங்கள் அகற்றப்படவில்லை.

இதைவிட திருமலை 'லவ்லேன்' பகுதியில் சுயவீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் வீடுகள் பெற்றிருந்த தமிழர்கள், கலவரத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் அகதிகள் முகாம்களுக்கும் சென்றபோது அவ் வீடுகளிலும் சிங்களவர்கள் குடியேறியுள்ளனர். தற்போது அவர்கள் திரும்பி வந்துள்ளபோதும் தமது வீடுகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இவ் அத்துமீறிக் குடியேற்றத்திற்கு அரசினதும் அரச படைகளினதும் ஆதரவும் ஒத்துழைப்பும் உள்ளதாக பரவலாகப் பேசப்படுகிறது.

சுதந்திரம் கிடைத்த காலம் தொடக்கம் அரச குடியேற்றத்தின் முழுக் கவனமும் திருமலை மாவட்டம் நோக்கியதாகவே உள்ளது. திருமலை வடக்கையும், கிழக்கையும் இணைக்கின்ற மாவட்டமாக உள்ளதால் திருமலையில் குடியேற்றுவதன் மூலமே தமிழ்த் தேசியத்தை சிதைக்கலாம் என அரசு கருதியது. எப்போதும் ஒரு தேசியம் வளர்வதற்கு ஓரே நிலத்தொடர்ச்சியினால் வாழும் மக்களின் ஐக்கியம் அவசியமானதாகும்.

திருமலையில் குடியேற்றுவதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் நிலத் தொடர்ச்சியை இல்லாமல் செய்ய முயற்சிக்கப்படுகின்றது. அல்லை, கந்தளாய், பதவியா, வெலிஓயா குடியேற்றங்கள் இவ்வடிப்படையில் ஏற்பட்ட குடியேற்றங்களாகும். வெலிஓயா குடியேற்றத்தை மையமாக வைத்து வெலிஓயா மாவட்டமே தற்போது கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

இவ்வாறு இதுவரை குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் திருமலை நகரைப் பொறுத்தவரை, இதுவரை தமிழர்களின் எண்ணிக்கையே அதிகளவில் காணப்பட்டது. இன்று அதனையும் இல்லாமல் செய்யும் வகையில் நகர்ப்புறத்தில் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றது.

** *** **

27 பக்கம் தொடர்

எவையும் பத்திரிகையில் வர அனுமதிக்காததோடு, தம்மால் நடாத்தப்பட்ட விடுதலைப் பத்திரிகையில் பணி செய்வதற்காக பத்திரிகையாளர் பலவந்தமாகக் கடத்தப்பட்டனர். தற்போது LTTE கட்டுப்பாட்டில் உள்ளபோதும் பத்திரிகையாளர்கள் இம்சிக்கப்படுகின்றனர். பத்திரிகைகளுக்கு வரும் செய்திகள் தணிக்கை செய்யப்படுவதோடு தம்முடன் முரண்படுகின்ற பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்படுகின்றனர். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் குடாநாட்டின் பிரபல பத்திரிகை யாளரான ஐ.சண்முகலிங்கமும் ஒருவராவர். ஈழநாடு பத்திரிகையில் நீண்டகாலம் பணிபுரிந்தவர் இவர். இறுதிக்காலத்தில் முரசொலியில் பணிபுரிந்திருந்தார். மாகாணசபை ஆட்சிக்காலத்தில் EPRLF இனால் கடத்தி வேலைசெய்விக்கப்பட்ட பத்திரிகையாளர்களில் இவரும் ஒருவராக விளங்கியிருந்தார். விடுதலைப் பத்திரிகையில் பணிசெய்தவர் என்பதற்காகவே கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

அரசினதும் ஆயுதம் தாங்கிய குழுக்களினதும் இத்தகைய அத்துமீறல்களுக்கு எதிராக பத்திரிகையாளரால் தனித்தனியாக போராட முடியாது. பத்திரிகையாளர் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாகவே போராடமுடியும். ஆனால் துரதிஸ்டவசமாக பத்திரிகையாளர்களிடையே ஐக்கியம் என்பது உலகளாவிய ரீதியில் இன்று பலவீனமாகவே உள்ளது. அதுவும் இலங்கையைப் பொறுத்தவரையில் மிகமிகப் பலவீனமாக உள்ளது. இப் பலவீனம் பத்திரிகையாளர்களை ஒடுக்குகிறவர்களுக்குச் சாதகமாக உள்ளது. இந்நிலைமையை உணர்ந்து செயற்படுவது எப்போது ..... ?

— அபூரணா —

www.tamilarangam.net

# அந்நிய இருப்பில்...... - ஒரு நிகழ்வு விவரணம்

தென்றலைத் தழுவிய சந்தோசிப்பில்
இளஞ்செடிகள்
தலையசைத்து ஆரவாரித்துக் கொண்டன.
இயற்கையின் காலத்தூரிகை
பூமியை அழகாகவே வரைந்திருந்தது.
ஓ.... பச்சை வர்ணம்
அதிகமாகச் செலவழிந்திருக்குமே! ......
பூமிப்பெண்ணிடமிருந்து
பிரசவித்துக்கொள்ளும்
அந்த ரம்மியங்களை ரசித்துக் கொண்டே
சியாமளா பயணித்துக் கொண்டிருந்தாள்.

" சியாமளா "
வயதிற்கு வந்தவள்.
வயது பதினாறை அடைந்தவள்,
அழகைச் சேமிக்கத் தொடங்கிவிட்ட பருவம்
அளவிற்கு மீறிய உருவம்.
நடுத்தர வயதையும் அடையாத
ஒரு இளங் குடும்பத்தில் மூத்தவள்
அவளுக்கு இளையவன் சுமன்.
குலக்கொழுந்துகளான
இந்த இரண்டு பிள்ளைகளுமே
குடும்பத்தின் துயரக் காயங்களிற்கு
மருந்து தடவும்
மகிழ்ச்சி மருத்துவர்கள்.

சவப்பெட்டி கடைகள் மட்டுமே
திறக்கப்பட்டிருக்கும்
எங்கள் மயான பூமியில்
வாழ முடியாமல்
விமானமேறியவர்கள்.

இப்போது
ஐரோப்பிய நாடொன்றின்
அகதிக் குடும்பம்
பள்ளிப் பருவம் என்பதால்
அந்த தமிழ் வீணைகள் இரண்டும்
அந்நிய ராகங்களையே
வாசிக்கத் தொடங்கி விட்டன.
சொந்த மொழியின்
ஆரம்பச் சுவடுகளை மறந்து
பூச்சியத்திலிருந்து தொடங்கும்
புதிய அத்தியாயத்தோடு அவர்களும்......

விடுமுறை நாட்களும்
பள்ளி நாட்களின் இரவுகளும்
அவளைப் பெற்றோரிடமிருந்து
பிரிப்பதேயில்லை.
இந்தச் சுற்றுலா வாரங்களுக்காக மட்டும்
பெற்றோரைப் பிரிந்தவள்

பிரிவுத் துயரத்தின் துளிகள் கூட
முகத்திலே ஒட்டிக் கொள்ளாமல்
குதூகலமாகவே பயணித்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு வாரங்களுக்கு
தேசத்தின் மையங்களையெல்லாம்
சுற்றி வருவதென்றால்
எத்தனை சந்தோசங்கள்
சுகானுபவங்கள்.......

அந்தச் சுற்றுலாக்காரர்களில்
அவளைத் தவிர
எல்லாமே ஐரோப்பிய முகங்கள்

வானத்தை எட்டிப்பார்க்கும்
அழகிய மலைமுகடுகள்,
தரையைத் தொட்டு
தவழ நினைக்கும்
நீர் வீழ்ச்சிகள்,
பாரம்பரியங்களை
புதுமைப் படுத்திக் காட்டும்
நூதன சாலைகள்



இவைகள் யாவும்
அந்தக் குதூகலப் பருவக்காரிக்கு
பால் வார்த்துக் கொடுத்தன.
அறிவிற்கும்
விருந்து படைத்தன.

சுற்றுலா வாரங்கள் கழிந்தன
அவள் வீடு திரும்பினாள்.

www.tamilarangam.net

கலண்டர்ச் செடியிலிருந்து
இன்னும் சில தினச் சருகுகள்
உதிர்ந்து கொண்டன.

அப்போதுதான்
துயரங்களைத் தாங்கியபடி
அந்தக் குடும்பத்திற்கு
ஒரு பூகம்பச் செய்தி.
அந்தச் செய்திகளை வாங்கும்
செவிகளைத் தவிர
இந்த பூமியில்
எல்லாமே ஓய்ந்துவிட்டது போல்
ஒரு அதிர்ச்சி .......

அந்தச் சுற்றுலா வாரங்களில்
அவள் கண்களுக்குள்
காட்சிகளைச் சேமிக்கச் சென்றபோது
தன் கர்ப்பத்திற்குள்
ஒரு சிசுவையும் சேமித்து வந்து விட்டாள்.

சியாமளா நினைத்துப்பார்க்கிறாள்
அந்த சில நாட்களில்
தன் மீது மொய்த்துக் கொண்ட
பிரெஞ்சுக் கண்களை,
தன்னையறியாமலேயே
அவனோடு சங்கமித்துக் கொண்ட
அனாதை இரவுகளை,
பாரிசு நகரத்தின்
சிக்கன மனிதர்கள்
அரைகுறை ஆடைகளோடு
சத்தமில்லாமலேயே
சல்லாபித்துக் கொண்ட
நதிக்கரையோரங்களில்
அவனது பார்வையோடு
தனது பார்வையும்
ஒரே நேரத்தில்
குவிந்து கொண்ட நிகழ்வுகளை.......

அவளின்
கர்ப்பத்தில் கையை வைத்தவன்
ஐரோப்பியக்காரன் என்பதால்
அந்த இளம் பெற்றோர்கள்
தலையிலே கையை வைத்தார்கள்.

தம்மகளைக் கருவுறுத்திய
பிரெஞ்சு மாணவனைச் சுட்டிக்காட்டி
சோகத்தை சொல்லியழுத போது
சுற்றுலாவிற்குப் பொறுப்பான
அந்த ஆசிரியர்
சுலபமாகவே சொல்லி முடித்த
வார்த்தைகள்
அவர்களை மட்டுமல்ல
அகதி வாழ்க்கைக்கென்று
நிர்ப்பந்திக்கப்பட்ட
ஒரு சமூகத்தையே
அதிர வைத்தது ........

சுற்றுலாவிற்கு வரும் போது
சியாமளா
கருவைத் தடுக்கும்
மாத்திரைகளோடு வரவில்லையா? ......

விடை காண முடியாத
இந்த வினாவைத் தவிர
வேறு எதையுமே பேசிக்கொள்ளாத
அந்த ஐரோப்பிய ஆசிரியருக்கு
இது சம்பவம்.
ஆனால் அவளுக்கு,
அழியாத வடுக்களையே
எழுதி வைத்த சரித்திரம்.

அன்னிய இருப்பில்
இன்னும் எத்தனை நாட்களுக்கு
இந்த அகதி வாழ்க்கை.

எதிர் காலக் கனவுகளையே
காண மறுக்கும்
இந்தப் பனிக்கால இரவுகளில்
எப்படித் துயில்வோம்.

அந்த அகதிக் குடும்பத்தில்
மனசுகளின் ராகங்கள்
ஒப்பாரி வைக்கின்றன.
அவள் கணவனில்லாமலேயே
கருவைச் சுமப்பதால் ........

**(இது கற்பனையல்ல ஒரு உண்மை
ஒப்பனை செய்யப்பட்டு இருக்கிறது)**

**அல்வை .S. கவின்**
(சுவிசிலிருந்து)

**22** பக்கம் தொடர்

இயக்கங்களும் பிரேமதாசாவிடம் நேரடியாக முழந்தாளிட்டு முறையிட்ட பின்னரே பிரேமதாசாவின் உத்தரவின்பேரில் கண்களைத் தோண்டியெடுத்தல் 'கட்டுப்பாட்டுக்குள்' கொண்டுவரப்பட்டுள்ளது.. இதைக்கூடப் புதிதாய் முளைத்த ஒரு தமிழ்மறவர் இயக்கம் மட்டக்களப்பில் நடந்த மர்மக் கொலைகளை ஜனாதிபதி நிறுத்திவிட்டாரென அறிக்கைவிட்டுப் பாராட்டியது. அன்னதானம் கொடுக்காத குறைதான்!

புத்தர் வடக்கு. கிழக்கில் தமிழராய்ப் பிறந்திருந்தால் நிச்சயமாய் அவரின் கண்களும் தோண்டப்பட்டிருக்கும்.

உலக மக்கள் பார்வை பெற உள்நாட்டில் தம் உயிர்களையும். கண்களையும் இழந்த அப்பாவித் தமிழர்களின் உடலைப் போலவே அவரது உடலையும் நாய் இழுத்துச்சென்றிருக்கும்.

**நன்றி : தூண்டில்**

www.tamilarangam.net

# ஒரு சரித்திரத்தின் இறுதி அத்தியாயம் முடிகின்றது



( இலங்கை கம்யூனிசு கட்சி செயலாளர் நா. சண்முகதாசன் 8.2.93 இல் லண்டனில் காலமாகியதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது. )

"சண்முகதாசன் காலமாகி விட்டார்" என்ற செய்தியை கேள்வியுற்றதும் உள்ளத்தில் வேரோடியிருந்த அவர் பற்றிய மதிப்பீடு மீண்டும் ஒருமுறை துளிர் விடத் தொடங்கிற்று. "தமிழ்ப் பிரதேசங்களில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கான கருத்தியல் வலுப்பெற மூலகாரணமாக விளங்கியவர் சண்முகதாசன்" என்ற போது அவர் மீதான ஒரு நேசிப்பும் ஆயுதமேந்திய அதே குழுக்கள் அராஜகம், எதேச்சாதிகாரம் என்று தொடங்கி அனைத்திற்கும் உச்சமான பாசிசத்தின் வழி நிற்கையில் அவர் மீதான வெறுப்பும் உள்ளத்தில் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதன் வெளிப்பாடாகத் தோன்றிய சிறு பொறிகளே மேல் வரும் அவர் பற்றிய மதிப்பீடாகும்.

1965-66ம் ஆண்டுக் காலப்பகுதி. இலங்கை அரசியலில் "சண்" என்ற பெயர் பரவலாக தெரியப்பட்ட நேரம்.

சர்வதேச அரங்கில் கம்யூனிசுகட்சிகளுக்குள் ரசிய-சீன பிளவுகள் வலுப்பெற்ற (1962-64 இலங்கையில் 64 இல்) வேளை சண்முகதாசன் அக்காலப்பகுதியின் புதிய மாக்சியவாதியாக விளங்கிய மாஓவையும், நவசீனத்தையும் அங்கீகரித்தார். இலங்கையின் மாஓவின் சிந்தனைகளை அறிமுகம் செய்து அதற்கு உயிர் கொடுத்தவரும் சண்முகதாசன்தான்.

யாழ்ப்பாணப் பகுதிகளில் மாக்சீய வகுப்புகளும் கருத்தரங்குகளும் பரவலாக இடம் பெற்றன. சண்முகதாசனும் அவரது அணியைச் சார்ந்த (கார்த்திகேசன் மாசுரர், மாதகல் கந்தசாமி, ஜனகன் போன்ற) பலரும் வெவ்வேறு தலைப்புகளில் வகுப்புகளை நடத்தினர். சண்முகதாசனின் வகுப்புக்கள், கருத்தரங்குகளிலும் மேடைப் பேச்சுக்களிலும் "அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்திற்கும் சமூக மாற்றத்திற்கான புரட்சிக்கும் பலாத்காரம் ஒன்றே சரியான மார்க்கம் என்ற கருத்தை அடிநாதமாகக் கொண்ட வெகுசனத் தன்மை மேலோங்கி நின்றது.

கந்தபுராணம், கந்தரலங்காரம், பகவத்கீதை போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு, முருகப் பெருமான் அசுரர்க்கு எதிராகப் போராடியமையை உதாரணம் காட்டியும், முட்டையில் இருந்து குஞ்சு வெளியில் வரவேண்டுமேயாக இருந்தால் கோதைக் கொத்தி உடைத்தே ஆக வேண்டும் என்றும், "பழைய சமுதாயத்தில் இருந்து புதிய சமுதாயம் ஒன்றைப் பிரசவிப்பதற்கான மருத்துவிச்சியே புரட்சி" என்ற மாக்சின் கூற்றுக்கும், "துப்பாக்கிக் குழாயில் இருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்ற மாஓவின் மேற்கோளுக்கும் புதிய விளக்கங்களை கொடுத்து ஆயுதம் ஏந்துவதன் அவசியத்திற்கான கருத்தியலை சிங்கள-தமிழ் (குறிப்பாக வடக்கு,கிழக்கு, மலையக) மக்களின் மனதில் பதிய வைத்தவர் சண்முகதாசன் ஒருவரே என்றால் கூட மிகையாகாது. (J.V.P ரோகன விஜேயவீரா கூட சண்ணின் அணியில் இருந்து பிரிந்து சென்றவர்தான்.)

1943 ம் ஆண்டு பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு நேரே கம்யூனிசக்கட்சியின் முழுநேர ஊழியராகப் பணியாற்றச் சென்ற சண்முகதாசன் தனது கட்சி வேலையைத் தொழிற்சங்கங்களினூடாக ஆரம்பித்தார். தொழிற்சங்க வேலைகளில் எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி, அரச நிர்வாகத்துடனும் சரி, முதலாளிகளின் நிர்வாகத்துடனும் சரி, எவ்வித அடிபணிதலும் இன்றி, சந்தர்ப்பங்களுக்கேற்ப தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டிகளையும் அமைத்து தொழிலாளர் போராட்டங்களில் நூறுவீதம் நேர்மையாக உழைத்தவர் என்பதும் மிகையான கூற்றல்ல. ஜி.ஜி பொன்னம்பலம் போன்றவர்கள் எதிர் நிலையில் நின்று வாதாடிய போதும் "சண்" வெற்றி பெற்ற பல சந்தர்ப்பங்களும் உண்டு.

www.tamilarangam.net

1966 ம் ஆண்டுக் காலப்பகுதியில் வடபகுதியில் புத்திஜீவிகள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட மக்களிடமும் புதிய விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணுவதில் சண்முகதாசனின் கருத்துக்கள் பெரும் பங்காற்றின. இதே சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் தொண்டமானின் தனித்தலைமையில் இருந்து விடுபடவும், புத்துணர்ச்சி பெறுவதிலும் சண்முகதாசனுடன் கூடவே அவரது தோட்டத் தொழிலாளர் சங்கமான "செங்கொடிச்சங்கமும்" பெரும்பங்காற்றியது.

யாழ் குடாநாட்டில் "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற முழக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன அமைப்பின் (தாழ்த்தப்பட்ட மக்களையும் உயர் சாதியினரையும் உள்ளடக்கிய அமைப்பு) ஊடாக சண்முகதாசனின் கம்யூனிசக்கட்சி நேரடியாகவே வழி காட்டியது. யாழ் குடாநாட்டில் புரையோடிப்போயிருந்த தீண்டாமைக் கொடுமைகள் அம்பலத்திற்கு வந்தன. கொடிகாமம், அச்சுவேலி, சங்கானை என்று ஆரம்பித்த தேனீர்க்கடை ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் இறுதியில் மாவிட்டபுரம் வரை சென்று பலவித இழப்புக்கள், தியாகங்களின் ஊடாக யாழ் குடாநாடு முழுவதும் பலத்த வெற்றியை ஈட்டியது. சாதி அமைப்பில் குறிப்பிட்டளவிற்கு தளர்வை உண்டாக்கியது.

கோட்பாட்டு ரீதியில் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம், தமிழ்-முசுலீம் மக்களின் இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமாக வலுப்பெற்று இலங்கை தேசிய விடுதலைப் போராட்டமாக பரிணமிக்கும் என்றுதான் இளந்தலைமுறை மாக்சியவாதிகள் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

1971 J.V.P கிளர்ச்சியின் போது 10 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சண்முகதாசன் வெளியில் வந்தார். இது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்தப்பட்டன. யாழ் குடாநாட்டிற்கு வந்த பல சந்தர்ப்பங்களிலும், கொழும்பிலும் இது பற்றி பலமாக விவாதிக்கப்பட்டது. (இது பற்றி சண்முகதாசனுடன் வாதிட்டவரில் அல்வாய் கங்காதரன் பிரதானமானவர்.)

ஆனால் சண்முகதாசன் தேசிய இனப்பிரச்சனையில் மரபு மாக்சியரின் விடாப்பிடியாக நின்றார். ஆரம்பத்தில் தமிழர்களை தேசிய இனமாக அங்கீகரிக்கப் பின்னின்றார். பிரதேச சுயாட்சியினூடான வளர்ச்சியில்தான் சுயநிர்ணய உரிமையை எட்ட முடியும் என்றார். இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் வகுப்புவாதப் போராட்டத்திற்குக் கொண்டு செல்லும் என்ற கருத்தில் உறுதியாக இருந்ததனால் இப்போராட்டத்தில் அக்கறை கொள்ளவில்லை. சுருங்கக் கூறின் "அனைத்துப் பிரச்சனையும் சோசலிசத்தில் தீர்ந்து போகும்" என்ற வாதத்திற்குள் இவரும் முடக்கப்பட்டார்.

வளர்ச்சிப் போக்கில் மாஓ என்ற புதிய மாக்சிய வாதியை அங்கீகரித்த சண்முகதாசன் தனது சொந்த நாட்டின் ஸ்தூல நிலைமைகளுக்கும், வரலாற்றில் இடம் பெறும் புதிய நிகழ்வுகளுக்கும் ஏற்ப இயங்கியல் விதியினூடே மாக்சிய அணுகுமுறைகளைக் கைக்கொள்ளத் தலைப்படவில்லை. இதற்கு அவர் வளர்ந்துவந்த மரபுவழி மாக்சியப் பாதையில் ஊறிப்போனதே காரணம் எனலாம்.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை தொடர்ந்து சண்முகதாசனின் கம்யூனிசக்கட்சியினால் இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தால்....... தமிழ் விடுதலைப் போராட்டமும் வேறு திசையை நோக்கி சென்றிருக்கும். தமிழ் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பாசிச போக்குகளும், அதன் அடியொட்டி பிறந்த தேக்க நிலைமைகளும் இன்றைய அதே குணாம்சங்களுடன் வெளிப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருந்திருக்கும். இந்நிலைமைகளை நன்குணர்ந்த எவரும் இச்சந்தர்ப்பத்தில் சண்முகதாசன் மீது மனம் நோகாமல் இருக்கமுடியாது.

1962 இல் சோசலிச நிர்மாணத்தில் இருந்து விலகியதால் சோவியத் யூனியனை நிராகரித்ததும், மாஓவிற்கு பிந்திய சீனத்தின் நிலைமைகளை இனங்கண்டு சீனாவும் சோசலிச பாதையிலிருந்து வழுவியதை எடுத்துக்கூறி சீனாவை நிராகரித்தமையும், பாராளுமன்றத்தை தமது இறுதிக்காலம் வரை நிராகரித்து வந்தமையும் ஆகிய அனைத்தும் அவரது நேர்மைக்கும், உறுதிப்பாட்டிற்கும் சான்றுபகரும் மேலதிக புள்ளிகளாகும். இத்துடன் சண்முகதாசன் மாக்சிச வரலாற்றுப் பொருள் முதல் வாதக் கண்ணோட்டம் கொண்ட சிறந்த வரலாற்று ஆசிரியராகவும் திகழ்ந்தார். இதற்கு மாக்சிச கண்ணோட்டத்தில் இலங்கைச் சரித்திரம், மகத்தான மாசேதுங் சிந்தனை, ஒரு கம்யூனிசப் போராளியின் அரசியல் அனுபவம் (அவரால் இறுதியாக எழுதப்பட்ட நூல்) ஆகிய நூல்கள் சான்றுகளாகும்.

இந்த வகையில் இன்று அரசியல் உலகு ஒரு நேர்மையான அரசியல்வாதியையும், சிறந்த சரித்திர ஆசானையும் இழந்து நிற்கிறது என்றால் தவறாகாது.

— லோகன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்

**வணக்கம்**
**நேசத்துடன் எழுதிக் கொள்வது,**

தற்காலக் கெடுபிடிகள், நிலைமைப் பிறழ்வுகள் அனைத்துக்கும் மத்தியில் மனிதம் இலங்கையில் கால் பதித்து செய்யும் மேலான சேவை மிகவும் உயர்ந்து போய்விட்டது. உலகின் சின்னா பின்னப்பட்டுப் போய் இருக்கும் மனித நசுக்கல்கள், வதைகள் என்பனவற்றை எல்லாம் நடுநிலைக் கண்கொண்டு பார்க்கும் மனிதத்திற்கு வரும் ஏச்சுக்கள் பேச்சுக்களும் அதிகம். சிலரின் வாதம், புலி சார்பு வெளியீடு மனிதம்! இன்னும் ஒருபக்கம் அவ்வாறல்ல என்பது. இப்படி எதிர்ப்புகளுக்கும் அன்புக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் மனிதம் இவ்வளவு காலமும் முள்ளாய்ப் படும் சிக்கல்களை எல்லாம் தவிர்த்து நிறைத்து வெளிவருவதே அதன் மேலான தூய எண்ணத்திற்கு ஒரு விளக்கமாக அமைகிறது.

இன்று இலங்கையின் ஈழப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம்கள் என்று தமிழ் மண்ணின் வடபிராந்தியத்தில் (புலிகளின் வதைமுகாம்களில் இருப்பவர்களைத் தவிர) எவரும் இல்லை. இலங்கையிலும் இந்தியாவிலும் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் பிளவு ஒவ்வொரு விதமாக வேரூன்றி வருவதனை அண்மைக் கால கசப்பான நிகழ்வுகள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

இந்த நிலையில் மனிதம் உலக மனிதர்களின் நசுக்கல், வடுக்களை மொழி, மத, குல, சாதி வேறுபாடு காட்டாமல் கூறி வருகிறது என்று எண்ணும்போது மனம் ஒருமுறை மனிதம் படும் கஸ்டத்தை எண்ணிப் பார்க்கிறது. மனிதத்தின் சேவையை மனதாரப் பாராட்டுகிறது. உள்ளூர மனிதத்தின் மேலுள்ள மதிப்பு இன்னும் பன்மடங்காகிறது.

இவ்வாறு மனிதம்–19 இல் அயோத்தியின் பாபர் மசூதியின் உண்மை நிலையினை வெளிநாடுகளுக்கும் தமிழில் விளங்கப்படுத்தியிருக்கிறது. அதே இதழில் எமது மலையக மக்களின் சோகக் குறிப்புகளை வெளிப்படுத்தி தெளிவுபடுத்தியிருப்பது, எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் எமது இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஈழமண்ணின் பரந்துபட்ட விவரங்களை எடுத்து நோக்கும் உணர்வை ஏற்படுத்தும் என்பதும் ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மையாகும். ஆரம்பத்தில் நான் கூறியதுபோல. 'மனிதத்தை' எதிர்ப்பவர்களும் சரிநிலை காணாதவர்களும் வெளிநாட்டிலும் இருக்கின்றார்கள் என்று நினைக்கும்போது மன வேதனையாக இருக்கிறது.

இன்னுமொன்றை இங்கே ரணம்விட்டுச் சொல்ல வேண்டியது கட்டாயம்! அரசியல் விவகாரங்களில் மட்டுமல்ல, மனிதம் இலக்கிய அமைப்போடும் மனிதனை இணைத்து வைத்து சீரிய தெளிவான ஒரு பாதையைப் போட்டிருக்கிறது. இந்தவகையில் கவிதை இலக்கியங்களால் ஈழமண்ணின் இரத்த உணர்வுகளை படம்பிடிக்கும் உயரிய பணியை மனிதம் செய்கிறது. என்று சொல்லுவேன். இது மிகைப்படுத்திச் சொல்லவில்லை என்பது மனிதம் வாசகர்களுக்கு விளங்கும். அத்தோடு இலங்கை இந்திய மக்களுக்கு 'மனிதத்தை' எத்தனையோ செலவுகள் மத்தியில் இலவசமாகக் கிடைக்கச் செய்திருக்கும் ஆசிரியர் குழுவிற்கு நன்றி செலுத்தாமல் இருக்க முடியுமா ?

மீண்டும் மனிதம் தன் பூரண உணர்வுகளுடன் வெளிவர பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்
**இளைய அப்துல்லா**
இலங்கை

www.tamilarangam.net

சுவிற்சர்லாந்திலிருந்து இலங்கை வரைக்கும் வரும் உங்கள் மனிதாபிமானமுள்ள 'மனிதம்' உலகளாவிய பல செய்திகளுடன் சுடச்சடவே என் கைகளில் கிடைத்தது. பாதிக்கப்பட்ட இலங்கை இதயங்கள் வடிக்கும் சோக கசிவுகளுக்கு ஒத்தடமாய் ஒத்து உறவாடும் ஒரு இதழ் மனிதம் எனின் அது மிகையாகாது.

**ஏ. எச். ஏ. கபீர்**

==================================== தொடம்கஸ்லந்தை, இலங்கை

எந்தவித சுயலாபமும் இல்லாத உங்களது இம் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்! எனக்கு நீங்கள் அனுப்பிய முதல் சஞ்சிகையின் நேர்காணல் எனும் பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. அதன் எஞ்சிய பகுதியை அடுத்த இதழில் கண்டு கொள்ள பேரவாக் கொள்கிறேன்.

**எம். எச். எம். தவ்ஷீர்**

==================================== திகாரியா, இலங்கை

தங்களது மனிதம்-18 புரட்டாதி-ஐப்பசி சஞ்சிகையையே என்னால் வாசிக்க முடிந்தது. அதன் மூலம் மனிதம் எவ்வித சார்பற்ற ஒரு சஞ்சிகை என்பதை உணர்ந்தேன். அதனது கட்டுரைகளையும் கவிதைகளையும் விமர்சனத்தையும் எவ்வித சோர்வுமின்றி ஒரே முறையில் ஒரே அமர்வில் வாசித்து முடித்தேன். அதன் கருத்துக்களும் போக்குகளும் என்னை வெகுவாக கவர்ந்தது. சஞ்சிகையின் அமைப்பு மிக ஒழுங்காக உருவாக்கப்பட்டிருக்கின்றது.

**எம். எச். எம். நலீம்**

==================================== இலங்கை

நான் நண்பனொருவனிடமிருந்து 'மனிதம்' ஐப்பசி-புரட்டாதி 92 இதழைப் பெற்று வாசித்தேன் என்னும் முழுமையாக வாசிக்க காலம் இடம் தரவில்லை. ஆசிரியர் தலையங்கம், இலங்கையிலிருந்து சில செய்திகள், எதியோப்பியாவும் சோமாலியாவும் ஆகிய தலைப்புகளை வாசிக்கவே எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவை பிரமாதமாக இருந்தன. குறிப்பாக கொப்பேகடுவவின் மரணம் இன்னும் மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இதைப்பற்றி இங்குள்ள பத்திரிகைகள் எழுதுவது மிக அரிது. இதைப்போல்தான் விமானப்படைத் தளபதியின் மரணமும் கேள்விக் குறியாகவே உள்ளது. நாட்டு நடப்புக்களை அதன் உண்மையான வடிவில் தரும் சஞ்சிகையாக மனிதம் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள எனக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

**எம். எச். எம். அனாஸ்**

==================================== இலங்கை

இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் மானுட நேயக் குரலாக மனிதத்தை என்னால் தரிசிக்க முடிந்தது. அறிஞ்சிப்பொத்தானை செய்தியில் மனிதத்தின் உண்மையை ஏற்றுக் கொள்கின்ற, ஊகத்திக்கு இடமளிக்காத பண்பை பார்த்துக் கொண்டேன்.

**என் ஏ. றபீஸ்**

==================================== புத்தளம், இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீ அம்மாவாகப் போகிறாயாம்

நீ
அம்மாவாகப் போகிறாயாம்
கேள்விப்பட்டேன்
நம்பமுடியவில்லை

எப்படியடி எல்லாம்
இலகுவாய்ப் போனது
அந்தக்காலங்களை . . . . . . .
அதிசயமாகத்தான் இருக்கிறது.

படுத்திருக்கும் மாட்டை எழுப்ப
அது சாணி போடுவதற்காய் வால் கிழப்ப
எனக்கென சொந்தம் கொண்டாடி
எருப்பொறுக்கி . . . .
அளவுபார்த்து . . . . . .
பெருமைப்பட்டு. . . . . . . .

எல்லாம்
காணாமல் போயிற்று.

அரைப்பதமாய்க் காய்ந்த
புழுக்கொடியலையும்
உங்கவீட்டு அடுப்புமேல் தொங்கும்
பனாட்டையும்
சட்டைக்குள் ஒளித்து
அது கரியாகிப் போக
அடிவாங்கி . . . . . .

**ஆ ள ந் தி**

ஏன் யாவும்
காணாமல் போனது
இதுபோல்தான் எல்லாம்
சிறகிழந்து போகுமா

அதிகாலை விடியுமுன்பே
குன்றுக் கிணற்றில
தண்ணி ஊறவைக்கும் போதாவது
நினைத்துப் பார்த்திருப்போமா

எனி நீ
வயிறு ஊதி
குழந்தை பெற்று
அம்மாவாகி
பாலூட்டி

இயற்கைதான்
இன்னொருநாள்
நானும் இப்படித்தான்

ஆனால்
எம் காலடிகள்
வேலியோரத்தில்
நாம் ஒடித்த விறகுகள்
அப்பப்போ காசாய் மாறிய
கலண்டர் கடதாசிகள்
கைகளால் பிறிந்து களிகுடித்த
பனங்காய்கள்
எல்லாம் இப்படியேதான்
மரணித்துப் போகுமா ?

www.tamilarangam.net

# பொங்கல்

'பொங்கலோ ! பொங் கல்!' இன்னு – நாங்க
புதுப்பானே அரிசிபொங்கி
பலவருஷம் கொண்டாடியும் – ஒரு
பலனுமில்லே ! திண்டாட்டம் !

ஒட்டெலயக் காம்புராவுலே – இங்கே
மாத்தமொண்ணு இல்லேண்ணா
கோட்டைவிட்ட கதையேதான் – தலைவரே !
கொடும்பாவி தானெரிப்போம் !

தைப்பபொங்கல் எங்களுக்கு – இங்கே
மெய்ப்பொங்கல் ஆவதெப்போ ?
தலைவலீன்னு நாங்கசொன்னா – எங்க ?
'தலையணையே மாத்து' கதே !

ஓட்டுகளைப் போட்டதாலும் – நாங்க
உருப்புடவே இல்லீங்களே !
உருப்புடாத கோயிலிலே – சோத்து
உருண்டெவாங்கித் தின்னாப்புலே ?

பொங்கவச்சிப் பொங்கவச்சி – ஆமா !
இங்கேபலன் இல்லேன்னு
நன்னாப்புரிஞ் சிக்கிட்டோம் ! – பொங்கி
நாங்கயெழப் போறோமுங்க !

'ஓட்டுப்போடு ! போடு' ண்ணு – கேக்க
தோட்டத்துக்குள் வாராதீங்க – நாங்க
போட்டுக் கொன்னிக் கொடமொடைப்போம் – அந்த
ரோட்டுமுச்சந் தீமொடக்கில் !

*இக் கவிதை மலையகத் தமிழ் மக்களின் மண் வாசனையுடன் எழுதப்பட்டுள்ளது*
***– கண்டி எம். ராமச்சந்திரன்***